

ஸ்ரீ வாசுதேவாய நம:

# ஹரிஹரகதா ரத்னாவளி

மூன்றாவது சரித்திரம்.

# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மா

இந்த ஹரிகதை

ஸ்ரீரங்கத்திலிருக்கும் துரையூர் ஸமஸ்தான
வித்வான் பிரும்மஸ்ரீ வேணுகோபால
சாஸ்திரிகள் அவர்கள் குமாரர்
ராமாயணம்

**T. S. V. மஹாதேவ**

சாஸ்திரிகளாலும்

அவர் குமாரர் சங்கீத வித்வான்

**M. இராஜகோபாலனாலும்**

எழுதப்பட்டு

திருச்சி
ஸ்ரீமட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1924-ஆம் ஆகஸ்டு-மீ

*Registered.* விலை ரூ. 0—12—0



ஸ்ரீ வாசுதேவாய நம:

# ஹரிஹரகதா ரத்னாவளி

மூன்றாவது சரித்திரம்

# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மா

இந்த ஹரிகதை

ஸ்ரீரங்கத்திலிருக்கும், துறையூர் ஸமஸ்தான
வித்வான் பிரும்மஸ்ரீ வேணுகோபால
சாஸ்திரிகள் அவர்கள் குமாரர்
ராமாயணம்

**T. S. V. மஹாதேவ**

சாஸ்திரிகளாலும்
அவர் குமாரர் சங்கீத வித்வான்
**M. இராஜகோபாலனாலும்**
எழுதப்பட்டு

திருச்சி
ஸ்ரீமட்டுவார் குழலம்பாள் அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

1924-ஸு ஆகஸ்டு-மீ

*Copy right Registered.* விலை ரூ 0—12—0

உ

# முன்னுரை.

ஸ்ரீ பகவானுடைய அநந்தகல்யாணகுணகணங்களைப் பலவகையாக முறையிடும் சாஸ்திரங்கள் பலவற்றையும் பரிசிலனை செய்யுமிடத்து, ஸ்ரீபகவான் ஸத்யரூபியென்றும், அவருடைய குணசிரவணாதி நவவித பக்தியே மோக்ஷத்திற்கு முக்கிய ஸாதனமென்றும், நன்குவிளங்கும். இத்தகைய சாஸ்திரங்களின் பயனைப் பாமரர்கள் கிருதயுகம் முதல் துவாபரயுகம் வரை விசுவாமித்திரர், வசிஷ்டர், நாரதர், வியாஸர், முதலான மகரிஷிகளின் மூலம் அடைந்து வந்தார்கள் பிற்பாடு கலியுகத்தில இவ்வுலகம் காலபேதத்தில் வசப்பட்டு, தர்மம் குறைய, அதர்மம் ஓங்க, ஜீவகோடிகள் உஜ்ஜீவிக்கும் வகைத் தடுமாறித்தவிக்க, இந்நிலைமையில், ஸ்ரீகருணாநிதியாகும் பிரபுவானவர், ராமதாஸ், கபீர்தாஸ், துளசிதாஸ், புரந்தரதாஸ், முதலான ஸாதுக்கள் பலரைப்பூவுலகிற்கு அனுப்பி, அவர்கள் பக்திநெறியைக் கொண்டும், அவர்களது பக்தி ரஸகீர்த்தனைகளைக் கொண்டும், ஜீவகோடிகள் உஜ்ஜீவிக்குமாறு செய்தனர், இங்ஙனம் சிலகாலம் நடைபெற்றது. மறுபடியும், கலியுகதர்மம் என்றே சொல்லலாகும் அதர்மம் மேலிட, பக்தியென்பது நாளுக்குநாள் குறைய, நமது சாஸ்திர விசாரமென்பதே அநேகமாய் இல்லையாயிற்று இதுவே நம்நாட்டுத் தற்கால நிலைமையென்பது என் கருத்து. இந்த எளிய நிலைமையில் நமக்கு நிதியென முன் வந்துள்ளார் பிரும்மஸ்ரீ துறையூர் மஹாதேவ சாஸ்திரிகள் எனப்படுவபர். இவர்கள் வடமொழியிலும் தென்மொழியிலும் ஒருங்கே வல்லவராய், ஸ்ரீமத்ராமாயணம் முதலான அநேக வடமொழிக்கிரந்தங்களை நல்ல தமிழில் மிகுந்த பக்தியுடன் கேட்போர் மனம் கரையுமாறு எடுத்தோதப் பலமுறை நான் கேட்டிருக்கின்றேன். இது மாத்திரம் அல்லாது, இவர்கள் இப்போது, தமது நண்பர்களிற் சிலரது வேண்டுகோளுக்கிணங்கி, வடமொழியிலுள்ள பலபக்தி நூல்களை, நமது தமிழ் நாட்டார் எளிதில் தெரிந்துகொள்ளுமாறு, 'ஹரிஹரசுதாரத்னவளி' என்பதாகப் பல கதைகளாக வெளியிடவும் ஆரம்பித்திருக்கின்றனர். இது நமது நாட்டாரின் அதிர்ஷ்ட வசமென்றே நான் எண்ணுகின்றேன். இவ்வாறு இக்கலியுகத்தின் இப்பாகத்திலும் இத்தகைய பேருதவிபுரியுமாறு முன்வந்துள்ள பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளிடத்தில் நாம் நன்றி பாராட்டி, [illegible]தை நாம நன்குமதித்து, அதன்பயனை நாம் [illegible] செய்யவேண்டுமென, ஆஸ்திகபுத்[illegible] அனைவரையும் நான் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்.

ஸ்ரீரங்கம்

8—9—24

வி. ஸ்ரீ[illegible]கோபாலய்யங்கார்.

(டிஸ்டிரிக்ட் முன்ஸீப் மானாமதுரை.)

18/828
600 0.3

உ

ஸ்ரீ கணேசாயநம:

ஸ்ரீ வாசுதேவாயநம:

# கிருஷ்ணஜநநம் — கதையின் சுருக்கம்.

கங்கைக்கரையில் உள்ள பரிக்ஷித்து மகாராஜனுக்கு ஸ்ரீபாகவதத்தைச் சொல்லிக்கொண்டு வரும்போது ஸ்ரீ கிருஷ்ணவதார கதையை விஸ்தரித்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்ட பரிக்ஷித்து மகாராஜனுக்கு சுகாசார்யாள் விஸ்தரித்துச் சொல்லுகிறார்.

“ஓ பரிக்ஷித்து மஹாராஜனே, முன் துவாபர யுகத்தில் தைத்யர்கள் கம்ஸாதி அரசர்கள் உருவம்கொண்டு பூமியில் ஸாதுக்களை ஹிம்ஸித்து த்தர்மத்தைக் கெடுக்கும்போது, பூதேவி துஷ்டர்கள் செய்யும் அநீதியின் பாரத்தை தாங்கமாட்டாமல் கோரூபமெடுத்து பிரும்மதேவனோடும் தேவதைகளோடும் ஸ்ரீய:பதியிடம் சென்று பணிந்து ஹேஜகத்ரக்ஷக! ஹேமுகுந்த! ஹேதீனபந்தோ! ஸ்ரீ ஹரே! பூமியைக்கார்க்க வேண்டும். கபஸாதி துஷ்டர்களை அடக்கவேண்டுமெனப் பிரார்த்திக்க பகவான் அவர்களுக்கு அபயம்கொடுத்து பிரும்மதேவனை ஏகாந்தமாய் அழைத்து “ஓ பிரும்மதேவனே! நான் பூமியில் தேவகிகர்ப்பத்தில் ஜனித்து கம்ஸாதி துஷ்டர்களை நிக்ரகித்து பூபாரத்தை நிவர்த்திக்கிறேன். தேவதாகணங்களையும் தைவஸ்திரீகளையும் என்னை உபசரிக்க கோ, கோப கோபிகைகளாக ஜனிக்கும்படி செய்யும்,” என்று ஆஞ்ஞாபித்து பிரும்மா முதலானவர்களைத் தம்தம் இடத்திற்கு அனுப்பிவிட்டார்.

“ஓ பரிக்ஷித்தே! பின்பு அந்த தேவகியின் விருத்தாந்தத்தைச் சொல்லுகிறேன் கேளும். சூரசேனவம்சத்தில் ஜனித்த வஸுதேவர், மதுராபுரிக்கரசனான உக்ரஸேனமகாராஜன் தம்பி தேவகன்

பெண்ணான தேவகியை மதுராபுரியில் விவாகம் செய்துகொண்டு அவளுடன் தேரின்மீதேறித்தன் கிரகப்ரவேசத்திற்குப் புறப்பட்டார். அப்போ உக்ரஸேனர் அளவற்ற ஸ்ரீதனங்கள் கொடுத்து தன்குமாரனான கம்ஸனை அவர்களைக்கொண்டு விட்டுவிட்டு வரும்படி அனுப்பினார். கம்ஸராஜன் அத்தம்பதிகள் ஏறிய ரதத்தில் தானே சாரத்தியம் செய்ய சதுரங்க ஸைன்யங்களால் சூழப்பட்டுப் போகும் வழியில் திடீரென்று ஆகாயத்தினின்றும் ஓர் அசரீர வாக்கு உண்டாயிற்று. அதாவது "ஹே துர்புத்தே கம்ஸா! இத்தேவகியினுடைய கர்ப்பத்தில் பிறக்கப்போகிற எட்டாவது குழந்தை உன்னைக் கொல்லப்போகிறது என்னும் அசரீரவாக்கைக் கேட்டமாத்திரத்தில் அளவிடா கோபம் கொண்ட கம்ஸன் கத்தியை தன் உரையினின்றும் உருவி தன் வலது கையால்பிடித்து இடது கையினால் தேவகியின் கூந்தலைப்பிடித்திழுத்து கொல்ல எத்தனிக்கும்போது ஸாதுவான வஸுதேவர் தேக்கி கம்ஸனுக்கு அநேக தர்மங்களைச் சொல்லியும் கேளாததனால் மருபடியும் கம்ஸனைப்பார்த்து" ஹே கம்ஸா! இந்த தேவகி வயிற்றில் பிறக்கும் சிசுக்களை எல்லாம் உன் கையில் தந்துவிடுகிறேன். அதுகளைக் கொன்றுவிடு. இவளை விட்டுவிடு." என்ற வார்த்தையைக் கேட்டு கம்ஸன் தேவகியைக் கொல்லாமல் விட்டு தேவகி வஸுதேவனைத் தன் அரண்மனையிலேயே வசிக்கும்படிச் செய்தான். வஸுதேவர் ஸத்யம் தவறாமல் தேவகிவயிற்றில் பிறந்த சிசுக்களைக் கம்ஸனிடம் கொடுக்க குழந்தைகளின் முகத்தைப்பார்த்தவுடன் கொல்ல மனம் வராமல் கம்ஸன் "தேவகிகர்ப்பத்தில் ஜனிக்கும் எட்டாவது குழந்தையைக் கொண்டுவாரும்" என்று சொல்லி ஆறு குழந்தைகளைத்திருப்பி வஸுதேவரிடம் கொடுத்துவிட்டான்.

சிலகாலம் கழித்து நாரதர் உபதேசத்தால் துஷ்டபுத்தியை அடைந்த கம்ஸன் அந்த ஆறு குழந்தைகளையும் கொன்று தேவகி வஸுதேவரைச் சிறையிலிட்டு ஸாதுக்களான யாதவர்களைத் தொந்திரவுசெய்ய, யாதவர்கள் பயந்து மதுரையை விட்டு குரு பாஞ்சாலாதி தேசங்களை யடைந்தனர். தேவகி ஏழாவது கர்ப்பம்தரித்து ஸ்ரீஹரியைப் போற்றினாள். "ஹே ஆபத்பாந்தவா!

அநாதரக்ஷகா! எனக்கு இந்த கர்ப்பம் எதற்கு உண்டாகவேண்டும்! ஐயோ! இந்தப் பாவியான கம்ஸன் அனியாயமாக இதுவரையில் என் வயிற்றில் பிறந்த ஆறுகுழந்தைகளேயும் கொன்றுவிட்டானே! இந்த ஏழாவது சிசுவையும் கொன்றுவிடுவானே! அபலையான யான் என்னசெய்வேன். இதை ரெக்ஷிப்பது தங்களுக்கு ஒரு பாரமா! கிருபைசெய்யக் கூடாதா!" என்று தேவகி பிரார்த்திக்கும் போது பகவான் வைகுண்டத்தில் தன் யோகமாயையைக் கூப்பிட்டு "ஹே மாயே! நீ இப்போது பூமியில் தேவகி கர்ப்பத்திலிருக்கிற ஏழாவது கர்ப்பத்தை எடுத்து நந்தகோகுலத்திலிருக்கும் வஸுதேவரின் மூத்தபத்தினியாகிய ரோகிணீதேவி கர்ப்பத்தில் வைத்து நீ யசோதை கர்ப்பத்தில் பெண்ணுகப் பிறக்கக்கடவாய். நான் அந்த தேவகீ கர்ப்பத்தில் எட்டாவது குழந்தையாக அவதரிக்கிறேன்" என்று ஆஞ்ஞாபித்தார். பின்பு மாயை அவ்வண்ணமே நடத்தினுள். தேவகியின் ஏழாவது கர்ப்பம் நஷ்டமாய் விட்டது என்று மதுரையில் பிரஸித்தியாய் விட்டது. பகவான் பின்பு வஸுதேவர் மூலமாக தேவகீ கர்ப்பத்தில் பிரவேசித்தார். தேவகீ எட்டாவது கர்ப்பம் தரித்ததை யறிந்த கம்ஸன் ஒரு சமயம் சிறைச்சாலே வந்து தேவகியைப் பார்க்கும்போது அவளது தேககாந்தியினுல் பயந்து நம்மைக் கொல்லப்போகிற ஸ்ரீ ஹரிதான் இவள் கர்ப்பத்தில் வசிக்கிறுர்" என்று தீர்மானித்து சிசு பிறந்தவுடனே கொன்றுவிட வேணுமென்று நிச்சயித்து பிறந்த உடனே தனக்குத் தெரிவிக்கும்படி காவலாளர்களேத்திட்டம் செய்து ஆஞ்ஞாபித்துத்தன் இல்லம் சென்றுன். தேவகீ கர்ப்பத்தில் வசிக்கும் பகவானேத் தேவதைகள் சீக்கிரம் பூமியில் அவதரிக்கும்படி பிரார்த்திக்க சிராவண கிருஷ்ணுஷ்டமி ரோகிணீ நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் அர்த்தராத்திரி வேளேயில் கிழக்கில் சந்திரோதயம் ஆகும்போது பகவான் தேவகியினிடமிருந்து அவதரித்தார்.

அப்பொழுது பாலவடிவம் கொண்டு சதுர்புஜராய் சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், கௌஸ்துபம், வனமாலே, பீதாம்பரம், ரத்னகிரீட, குண்டல, கேயூர, ஹார, கடக, கங்கணம், முதலானது

களால் விளங்குகிற திருமேனியையுடைய பகவானைப் பார்த்து தேவகி வஸுதேவாள் துதித்தார்கள். உடனே பகவான் அவர்களை ப்பார்த்துத் தன்னைப்புத்ரனாக அடைய அவர்கள் முன் செய்த தபஸ்ஸைத்தெரிவித்து அவர்களின் வேண்டுகோள்படி தான் இரண்டுகையுள்ளப்ராகிருத சிசுவைப்போல் ரூபம் தரித்து" ஓ வஸுதேவரே! கம்ஸனிடம் உங்களுக்குப் பயம் இருக்குமேயாகில் நந்தகோகுலத்தில்இதே வேளையில் என் மாயையசோதைக்குப் பெண்ணாகப் பிறந்திருக்கிருள். என்னை எடுத்துக்கொண்டு அவ்விடத்தில் விட்டு விட்டு, அந்த மாயையை இவ்விடம் கொண்டு வந்துவிடும்." என்று ஆஞ்ஞாபித்தார். உடனே வஸுதேவர் அவ்விதம் செய்ய எத்தனிக்கும்போது பகவதாஞ்ஞையால் மழை பெய்துகொண்டிருந்தது. காவலாளிகள் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள். கோட்டைவாசல் கதவுகள் தானகவே திறந்துகொண்டன, நடுவிலிருக்கும் யமுனநதி வழிவிட்டது. நந்தகோகுலத்திலுள்ளவர்களும் நித்திரை செய்தார்கள். அப்போது வஸுதேவர் ஸ்ரீ பால கிருஷ்ணனை யசோதையிடம் விட்டுவிட்டு மாயையைத் தரித்து தேவகியினிடம் சேர்த்தார்.

தேவகியிடம் மாயை வந்ததும் க்வா-க்வா என்று குரலிட ரக்ஷகர்கள் விழித்து கம்ஸனிடம் தெரிவிக்கக் கம்ஸன் அதைக் கேட்டு கோபாவேசத்துடன் புறப்பட்டு தேவகி ஸூதிகாகிரகம் வந்து அப்பெண் மகவை கொல்ல ஆரம்பிக்க தேவகி எவ்வளவு வேண்டியும் மனமிறங்காமல் அக்குழந்தையின் காலைப்பிடித்திழுத்துத் தன் கையில் பிடித்து வேகமாய்ச்சுழற்றி வெளியிலுள்ள பெரும் கல்லில் அடிக்க ஆறம்பிக்க அம்மாயா தேவி அனேகமுகம் கை கால்களுள்ள துர்க்கையின் உருவம் வகித்து ஆகாயத்தில் கிளம்பிக் கம்ஸனைப்பார்த்து "அடா கம்ஸா! என்னை ஏன் கொல்லுகிருய்! உன்னைக்கொல்லும் குழந்தை பிறந்து மறைந்திருக்கிறது. காலத்தில் பிரகாசமாகும்." என்று தெரிவித்து வானோர்களாற் பூஜிக்கப்பட்டு மறைந்தாள்.

அதைக்கேட்ட கம்ஸன் பயந்து "ஆஹா! இது என்ன ஆச்சரியம்! நாம் எவ்வளவோ ஜாக்கிறதையாக யிருந்தும் விதியின்பயனை

தடுக்க யாரால் முடியும். வீணில் தேவகி வஸுதேவாளை துக்கத்தை அடையச் செய்தோமே." என்றுப் புலம்பி தேவகி வஸுதேவாள் காலில் வணங்கி அவர்களைச் சிறையினின்றும் நீக்கித் தன்னிருப்பிடம் சென்றான்.

நந்தகோகுலத்தில் பகவான் வந்ததும் எல்லோரும் விழித்து யசோதைக்குப் பிள்ளைக் குழந்தைப் பிறந்திருக்கிறது என்றுமிக்க சந்தோஷத்துடன் நந்தகோபனுடன் எல்லோரும் ஸ்ரீ கிருஷ்ண ஜன்மோத்ஸவம் கொண்டாடினார்கள். பகவான் கோகுலம் வந்ததுமுதல் கோகுலத்தில் அஷ்டலக்ஷ்மீ வாஸம் செய்தாள். தேவதைகள் பூமாரி பொழிந்தார்கள். பூமி செழித்தது. இந்தக்கிருஷ்ண ஜன்ம சரித்திரத்தை எவர்கள் படிக்கிறார்களோ, கேட்கிறார்களோ அவர்கள் ஸர்வாபீஷ்டங்களையும் பெறுவார்கள்.' என்று சுகப்பிரும்மம் பரிக்ஷித்து மகாராஜனுக்குத் தெரிவித்தார்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## ஸ்ரீ கிருஷ்ண ஜந்மசரித்திர கதையின் சுருக்கம்.

முற்றிற்று

பின்பு பஞ்சபதீ முதலியவை பாடுகிறது.

# ஸ்ரீ கிருஷ்ண ஜந்மாக்யான நாம ஸித்தாந்த நிருபணம்.

## பிரதமபதம் - காபிராகம் - ஆதிதாளம் !!

(1)

நாராயண, பஜரே-மானஸ—(நாரா)

த்ரிபுவனபதிபத சிந்திஸி ஜரிதூம் காயஉணேம்துஜரேம் (மானஸ)
விஷயஉபேக்ஷ ஙி அனுபவக்ஷ ஙி ஆத்மபதீம் பஜரே (மானஸ)
கிருஷ்ண தயார்ணவ கர்ணபுடம்துஜஹேஞ்சிகதீம் வஸரே(மானஸ)

ஆகௌ இந்தப் பிரதமபதத்தால் பெரியவாள் மனஸ்ஸைக்கு றித்து உபதேசிக்கிருள் ஷாட்குண்யபரி பூர்ணரான ஸ்ரீமந்நாரா யண பஜனே பண்ணினல் ஜன்மஸாபல்யம் உண்டாகும் என்று மனஸ்ஸைப்பார்த்துச் சொன்னர். ஏன் மனஸ்ஸைப்பார்த்துச் சொன்னரென்றல், பந்த மோக்ஷங்களுக்கு மனஸ்ஸுதான் கார ணம் என்பதை அமிருதபிந்தூபநிஷத்தில் தெரிவிக்கிருர்.

**(ச்லோகம்)** மந ஏவ மனுஷ்யாணும் காரணம் பந்தமோக்ஷயோ: ! பந்தாயவிஷ யாஸக்தம் முக்த்யை நிர்விஷயம் ஸ்மிருதம் !!

இதன் அர்த்தமாவது மனுஷ்யர்களுடைய மனஸ் ஸேபந்தத்திற் கும் மோக்ஷத்திற்கும் காரணமாகும். அது எப்படியென்றல் ஸ்ருக் சந்தனதிவிஷயங்களிலே மனது பிரவிர்த்தித்தால் ஜன்மமெடுக்கும் பந்தகமுள்ளதாய்விடும். விஷயத்தில் மனது ஸம்பந்தப்படாம லிருந்தால் மோக்ஷத்தை அடைந்தவனுவான். என்பதால் மனது, விஷயத்தில் சம்மந்தப்படாமல் இருந்தால் பகவத்கிருபையை அடையலாம். என்பதை த்யாகப்பிரும்மம் ஒருகிருதியினல் தெரி விக்கிருர்.

கீர்த்தனம்—ராகம்—நாட்டக்குரிஞ்சி—ஆதி

மனஸா விஷய நட விடுல
கோஸங்கிதெ மா ராமுனிக்ருப கல்குனேமனஸா (ம)
தனதனு போகரின்டிகி—தீசிபெட்டிதா, குக்கனு தோனுரீதி காதோ (ம)

தவுடிகி ரங்காட போயிகூடி
தபி லெ கோதி கொம் போயினகாதோ
செவுடிகி உபதேசிஞ்சினடு காதோ
ஸ்ரீ த்யாகராஜநுதுனி தலகச (ம)

**இதன் அர்த்தம்**—ஓ மனஸே நீ நடவிடாதி விஷயங்களிலே ஸம்மந்தித்தால் உனக்கு என் பிரபுவினுடைய கிருபை கிடைக்குமோ!

ஒருக்காலும் கிடைக்காது. விஷய சம்பந்தமில்லாமல் மனஸ்ஸு சுத்தமாய் இருந்தால் பகவத்கிருபை கிடைக்கும். அவ்விதமில்லாமல் மனஸ்ஸைத் திறந்து வெளியில் விட்டுவிட்டால் தன் வீட்டுக் கதவைப்பிடுங்கி அயலாருக்குக் கொடுத்துவிட்டால் தன் வீட்டில் நாய் நுழைய அதைத் துறத்த சிரமப்படுவதுபோல் இந்திரியங்களின் வழியை அடைக்கக்கூடிய மனதை நிலைநிறுத்தாமல் இஷ்டப்படி விட்டுவிட்டால் விஷய ஸம்பந்தங்களால் மனஸ்ஸுக்கு அனேக ஹிம்ஸைகள் நேரிடும். அப்படி மனஸ்ஸு, விஷயத்தில் மூழ்கிவிட்டால் ஸத்விஷயம் எவ்வளவு சொன்னபோதிலும் செவிடனுக்கு உபதேசம் பண்ணினதுபோல் வீணாகப்போய் த்யாகராஜநுதனை பிரபுவை ஸ்தோத்திரம் பண்ண இடங்கொடாமல் மனஸ்ஸு அன்யாயமாகக் கெட்டுப்போய்விடும். ஆகையால் (மானஸா நாராயணபஜ) என்றார், உலகத்தில் ஸாமனுளுடன் சேர்ந்தால் ஸுகமுண்டென்று பெரியவாளான ஐயாவாள் ஒரு ச்லோகத்தால் மனஸ்ஸுக்குப் போதிக்கிறார்.

**ச்லோகம்**— மன: குத்ரோத்யோகஸ்ஸ பதி வத தேகப்யபதவீம் நரம்வா நாரீம்வா கமன முபயத்ராப்யனுசிதம்யதஸதேக் லீபத்வம் ப்ரதி பத மஹோ ஹாஸ்யஜனகம் ஜனஸ் தோமே, மாகா:த்வமனுஸாஹிப் பிரும்ம பரமம்!!

ஐய்யாவாள் இந்த ச்லோகத்தால் என்ன தெரிவிக்கிறார் என்றால் சேதனர்களுடைய மனஸ்ஸு பரப்பிரும்மத்தையே எப்போதும் நாடியிருக்க வேணும் என்பதைக் கருத்தில் வைத்துக் கொண்டு தன்மனஸ்ஸை ஒரு நபும்ஸக புருஷனாக அழைத்துச் சொல்லுகிறார். (மனக்குத்ரோ............ பதவீம்) ஓ மனஸ்ஸே எந்த இடத்திற்குப் போகிறாய்; இப்போ நீ போகும் இடத்தை எனக்குச் சொல்லு (நாம்வா.........அநுசிதம்) புருஷாளிருக்குமிடம் போகிறாயா? ஸ்திரீகள் இருக்குமிடம் போகிறாயா— இரண்டு இடத்திற்கும் நீ போகக்கூடாது. யதஸ்தே— ஏனென்றால் (க்லீபத்வம்) நீ ஏன் நபும்ஸகனாகயிருக்கிறாயோ ஆகையினால் நீ ஸ்திரீபுமானுள்ள இடம் போகாதே. அப்படிப் போனால் என்ன நேரிடும் என்று கேட்கிறாயோ! (பிரதி......ஜநகம்) நபும்ஸகனான உன்னைக்கண்டு ஸ்திரீபுமான்கள் பரிஹாஸம் செய்வார்கள். ஆகையால் (ஜனஸ்தோமே மாகா:,) கும்பலுள்ள இடம் போகாதே. பின்னை யாரிடம் சேருகிறது என்று கேட்கிறாயோ (த்வமநு...............பரமம்) உன்னைப்போல் நபும்ஸகமான பரப்பிரும்மத்தை நாடு பரப்பிரும்மத்தை நாடாமல் மனஸ்ஸானது வேறு விஷயத்தில் பிரவேசித்தால் விஷயாஸக்தியால் ஸதா அவ்விடத்திலேயே கட்டுப்பட்டு கிடக்கும். இதை வேடிக்கையாகப் பெரியவாள் ஒரு விரஹியின் விருத்தாந்தத்தால் காண்பித்து எழுதுகிறார் ஒரு காமுகியான புருஷன் தன் ஆசாநாயகியை விட்டுப்பிரிந்து ஓரிடத்தில் விரஹதாபத்தினால் புலம்பிக்கொண்டிருந்தான். அப்போ அவனுடைய மித்திரனை வேறொருவன் அந்த விரஹியினுடைய ஸமீபம் வந்து நின்றான். மித்திரன் வந்ததும் கண்ணுக்குத் தெரியவில்லை. அவன் குசலப்பிரச்னம் பண்ணினதும் காதில் விழவில்லை. பிறகு வந்த மித்திரன் விரஹியைச் சாந்தப்படுத்தி என்ன! நான் வந்தது உனக்குத் தெரியவில்லையா! நான் பேசியது உன்காதில் படவில்லையா! என்று கேட்டான். அதற்கு விரஹி ஜவாபு சொல்லுகிறான்.

**ச்லோகப் :-** நபும்ஸக மிதிக்ஞா த்வா ப்ரியா யைப்ரேஷிதம்மந!
ததது தத்ரை வரமதே ஹதா: பாணி நிநாவயம் !!

இதன் அர்த்தம்-ஹேமித்ரா என்னுடைய ப்ராணகாந்தியினி டம் என்னுடைய மனஸ்ஸு நபும்ஸகமென்று நம்பி அனுப்பி னேன். அந்த மனஸ்ஸு அவளிடத்திலேயே சுகித்துக் கொண்டி ருக்கிறது. பாணினி மஹரிஷி மனஸ்ஸை நபும்ஸகமென்று சொன் னரே அதை நம்பி நாம் கெட்டுப்போய் விட்டோம். அந்தமனஸ்ஸா னது இப்போ என்னிடம் இல்லாததனல் என் கண்ணினல் பார்க்க வும் காதினல் கேட்கவும் சக்தியில்லாமல் போய்விட்டது. ஆனல் வியாகரண சாஸ்திரத்தினல் மனுஷ்யாளுக்கு என்னபிரயோசன மென்றல்

(ஆர்யா)- யத்யபிபகு தா நாதீஷே ததாபிபட புத்ரவ்யாகர ணம்! ஸ்வஜநோச்வஜனே மா பூத்ஸகலம் சகலம் ஸக்ருத், ஸக்ருத்!!

(கருத்து) அப்படி யிருந்தாலும் வியாகரணம் படிப்பதனல் என்ன ப்பிரயோஜனம் ஏற்படுமென்றல் (ஸ்வஜனம்—ச்வஜநம்) தன் கூட்டம் நாய்க்கூட்டம் (ஸகலம்) எல்லாம் (சகலம்) திவிலே (ஸக்ருத்) ஒருதடவை (சக்ருத்) சாணிஎன்னும் அர்த்தபேதம் உள்ள வ்யாகரணம் தெரிந்தால் பதபேதமும், அர்த்தபேதமும், தெ ரியுமேயொழிய மனஸ்ஸை வியாகரணத்தால் அடக்கமுடியாது. மேலும் (மா) யென்றும் எழுத்தை முதலெழுத்தாய் வைத்துக் கொண்ட பத்துவஸ்துக்கள் ஸதா சஞ்சல ஸ்வபாவமுள்ளது.

அதாவது (ச்லோகம்) மனே மதுகரோ மேக: மாநிநீமதனே மருத்! மா மதோ மர்கடோ மத்யஸய:, மகாரா தச சஞ்சலா: !!

அர்த்தம் மனது வண்டு, மேகம், மானினீ என்னும் ஸ்திரீ, மன்மதன் மருத் என்னும் காத்து மா- லக்ஷ்மி மத: - கொழுப்பு மர்கட: - கொரங்கு - மத்ஸ்ய: - மீன்- மா என்னும் ஆதி எழுத் துடன் ஆரம்பிக்க கூடிய இந்த பத்து வஸ்துக்களும் அசையும் ஸ்வபாவத்துடன் கூடியது என்று சொல்லியிருப்பதால் மனஸ் ஸு எப்போதும்ஸ்திரீபுத்ர கிருஹ க்ஷேத்ர ஆராமாதிகளில் சலித்துக்கொண்டே யிருக்கும். ஆகையால் அதைத்திருப்பி நாராயணனைப் பஜிக்கச் செய்யவேண்டும். என்பதினலே

(நாராயண பஜரே) என்று தெரிவித்தார். அப்படி பஜனை பண்ணினால் ஸகல பாபங்களையும் நிவர்த்தித்து முக்தியை நாராயண நாமம் தரும் என்று பரிக்ஷித்துக்கு சுகாசார்யாள் சொல்லுகிறார்.

**ச்லோகம்:**- ஏதாவதாலமக நிர்ஹரணாயபும்ஸாம் ஸங்கீர்த்தனம் பகவதோ குணகர்மநாம்நாம்! வ்யாக்ருருச்யபுத்ரம் அகவாந்யத ஜாமிளோபி நாராயணேதி மிரியமாண இயாயமுக்திம் !!

தாஸீவிடனாகவும் கர்மப்ரஷ்டனாகவுமுள்ள அஜாமிளன், அந்தியகாலத்தில்தன் பிள்ளையான நாராயணனை உத்தேசித்து நாராயணா! என்றுகூவிப் பிராணனை விட்டபோது பாபங்களிலிருந்து விடுபட்டெப்படி முக்தியை அடைந்தானோ, அதுபோல் பகவானுடைய நாராயண நாமத்தை உச்சரித்தால், ஸகல பாபங்களினின்றும் விடுபட்டு நாம்முக்தனாகுவோம். என்பதை உத்தேசித்தே(நாராயண பஜரே) என்று தெரிவித்தார்-. (அவதாரிகை) அந்த நாராயணரை எப்படி பஜிக்கிறது என்றால் சரணத்தில் தெரிவிக்கிறார்.

ராகம் ஹிந்துஸ்தானி தோடி ஆதி

1. த்ரிபுவனபதி பத சிந்த ஸீஜரிதாம்—
   காய உணதுஜூரேம் [மானஸா]

2. விஷய உபேக்ஷ—ணி - அனுபவலக்ஷ—ணி
   ஆத்மபதீம்பஜரே [மானஸா]

3. கிருஷ்ண தயார்ணவ — கர்ணபுபீம்துஜ — ஹேஞ்சிகதீம்
   பஜரே — மானஸா (நாராயண பஜரே)

ஏ மனஸ்ஸே ! த்ரிபுவனபதியின் பதத்தை எப்போதும் சிந்தி விஷயவாஸனையை ஒழி - பரமாத்மாவின் சரணத்தைக் குறித்து எப்பொழுதும் மனனம் பண்ணு. பகவத்கதா மிருதத்தை காதாகிற தொன்னையால் எப்பொழுதும் பானம் பண்ணு. என்று மனஸ்ஸை உத்தேசித்து சம்போதனம் செய்து உபதேசித்தார். ராஜனால் பிரஜைகள் க்ஷேமத்தை அடைவதுபோல் மனஸ்ஸாலே தான் ஜீவாத்மாக்கள் க்ஷேமத்தை அடையவேண்டும். ஆகையால்

ஹே மனஸ்ஸே நாராயணனே பஜி என்று உபதேசித்தார். அப்படி பஜனைபண்ணினால் பகவான் வந்து ரக்ஷிக்கிறார்.

கீதை:- யதா யதாஹி தர்மஸ்ய க்லானிர்பவதி பாரத! அப்யுத்தானமதர்மஸ்ய ததாத்மானம் ஸ்ருஜாம் யஹம்!!

என்றபடி தேவதைகள், பூதேவி, முதலானவர்கள் பஜித்தவுடனே, பகவான் கிருஷ்ணாவதாரம் செய்து தேவதை முதலானவர்களை ரக்ஷித்தார் என்று சொல்லுகிற கிருஷ்ண ஜன்மாக்யாயத்தை எனக்குத் தெரிந்தமட்டிலும் சொல்லலாம் என்று ஆரம்பித்தேன். சபையிலுள்ள பெரியோர்கள் என் வாக்கிலுள்ள குணத்தை மாத்திரம் கிரஹித்து தோஷங்களை ஒதுக்கி என்னை ஆசிர்வதிக்கக் கோருகிறேன்.

## நாம சித்தாந்த நிருபணம்

முற்றிற்று,

பின்பு த்ருபத் - தில்லானா - முதலானதுகளை பாடுகிறது.

உ

ஸ்ரீவாஸுதேவாய நம:!

# ஸ்ரீ கிருஷ்ண ஜன்ம சரித்திர நிரூபணம்!!

## (1) ச்லோகம்

பூமிர்த்ருப்த நிருபவ்யாஜாத் தைத்யாநீகசதைர்யுதா! ஆக்ராந் தாபூரி பாரேண பிரும்மாணம் சரணம்யயௌ !!

**இதன் கருத்து:-** ஸ்ரீய:பதி கிருஷ்ணவதாரம் செய்ததை விஸ்தரித்துச் சொல்லவேணுமென்று கேட்டுக்கொண்ட பரிக்ஷித்து மஹாராஜனைப் பார்த்து சுகாசார்யாள் கிருஷ்ணவதார கதையை விஸ்தரித்துச் சொல்லுகிறார். "ஓ பரிக்ஷித்து மஹாராஜனே! பூர்வத்தில் கர்வம் நிரைந்த ராஜாக்களாகிற அசுரகோடிகளால் உண்டான அதர்மமாகிற பாரத்தைத் தாங்கமுடியாமல் பூதேவி பிரும்மாவைச் சரணமடைந்து பிரார்த்தித்தாள்.

**அவதாரிகை:-** அதையறிந்தப் பிரும்மதேவன் என்னசெய்தார் என்பதை ஒரு ஆர்யையினால் தெரிவிக்கிறார்.

## (2) ஆர்யா.

நளிநோத்பவசரணகத திதிதநுஜபார்த பூமிச்யா அவநா! ப்ரார்திஜாஉநி தேவாம்ஸஹ துக்தோததிதடம்ரமாபவநா!!

**இதன் கருத்து :-** பிறகு கமலோத்பவனன பிரும்மதேவன் கம்ஸாதிகளான அஸுரர்களுடைய அதர்மபாரத்தால் ஹிம்ஸை அடைந்த பூமியை ரக்ஷிக்கும் பொருட்டு பூமியையும் தேவதை களையும் அழைத்துக்கொண்டு பகவான் வசிக்கும் க்ஷீராப்திக் கரையை அடைந்து பகவானை ஸ்தோத்திரம் செய்ய ஆரம்பித்தார்.

## (3) கானடா ஆதி

தாம்வரமாபதே க்ஞானவிலாச பூர்ணபராத்பர - சாந்திநிவாஸ
[தாம்வ]

கம்ஸாதிஹகல - துர்மதபாரீ - கோத்விஜபாஹுனி - பேவனிமாரீ
[தாம்வ]

ராமகிருஷ்ணகுரு - ராஜஉதார - பாண்டுரங்க நிஜஸுக தேதாஸ
[தாம்வ]

**இதன் கருத்து**:- "ஹே ரமாபதே! ஞானவிலாஸ! பூர்ண! பராத்பரா! சாந்திநிவாஸ! கம்ஸாதிகளான துஷ்டர்கள் துர்மதத்தால் பூமி, த்விஜாள், தர்மம், இதுகளை அனியாயமாக உபத்திரவப் படுத்துகிறார்கள். ஹேஉதார! ஹே பாண்டுரங்கா! ஹே ராமகிருஷ்ணகுருராஜ! சீக்கிரம் வந்து தங்கள் தாஸர்களுக்குச் சௌக்கியத்தைக் கொடுக்கவேண்டும்." என்று ப்ரார்த்தித்தார். அப்போது பகவான் பிரும்மதேவனுக்கு அசரீரவாக்கினால் என்ன அனுக்கிரகம் செய்தாரென்றால்

## (4) அபங்கம்—ஆதி

தேவகி உதரீம் - ஏஈலபகவான - ரக்ஷி விப்ராம்மண - காயீபக்த - உதரீத பார மாரீலதைத்யாம்ஸீம் - ஆனந்த ஸர்வாப்ஸீகரீலதோ!!

**இதன் கருத்து**:- "ஓ பிரும்மதேவனே! நான் தேவகீகர்ப்பத்தில் அவதரித்து அஸுரர்களை வதித்து பூபாரத்தை நிவர்த்தித்து பக்தகோடிகளைக் கார்த்து ஸாதுக்களுக்கு ஆனந்தத்தை விளைவிக்கிறேன்" என்று சொல்லி அனுப்ப, பிரும்மா தேவதைகளிடம் என்ன சொன்னாரென்றால்

## (5) கந்தம் பியாக்

ஹிரிபூஜார்த்தமுபுட்டுடு - ஸுரகந்யுலு ஸுந்தாதனுலே! ஹிரிக்கா ஜுடை சேஷுடு ஹரிகலதோபுட்டு தத்ப்ரியாரம்புடை!!

**இதன் கருத்து**:- ஹே தேவதைகளே! கிருஷ்ணவதாரம் செய்யப்போகும் பகவதுபசாரத்தின் பொருட்டு பூமியில் தேவகன்

னிகைகளும் தேவதைகளும் கோ, கோப, கோபிகைகளாக ஜன்ம மெடுக்கவேண்டும். ஆதிசேஷன் பகவான் அறிக்கையின் பேரில் தமையனுன பலராமவதாரம் செய்யப்போகிறுர் என்று தேவதைகளிடம் பிரும்மதேவன் ஆக்ஞாபிக்க அவ்விதமே ஸுரர்கள் ஸுரகன்னிகைகள் பூமியில் நந்தகோகுலத்தில் கோ, கோப, கோபிகைகளாக ஜன்மாவடைந்து பகவதவதாரத்தை எதிர்ப் பாத்திருந்தார்கள்.

**அவதாரிகை:-** பூர்வம் பகவான் தேவகீகர்ப்பத்தில் அவதரிப்ப தாகச்சொன்னுரே. அந்த தேவகி யார் என்னும் விவரத்தை சுகா சாரியாள் தெரிவிக்கிறுர்.

## (6) ஸாகி—ஆதி

ஜகதி நுக்ரஸேநந்ருபாலுண்டக - கம்ஸுடுப்ரேமகனு - ஸொகுஸுகானு மது ராபுரமேலுத்ஸு - ஸுகமுநண்டகானு !!

தகுநுதகதோ - புட்டினதேவகி - தருணினி வஸுதேவுனிகி - பொகருமீரின - கபுடேபெண்ட்லீ - ஜேஸெநு - பூதமெல்லநு மெத்ஸக !!

**இதன் கருத்து :-**

பூலோகத்தில் விளங்கும் அங்க, வங்க, களிங்க, நேபாள, மகத, காச்மீர, குந்தள, குரு, பாஞ்சால, சூர, சோள, சேர, பாண்டியாதி ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றுகிய, சூரதேசத்தை ஆளும் மஹாராஜனுக்கு அரசாக்ஷி பட்டணமாகிய, மதுராபுரியென்னும் பட்டணத்தில் உக்கிறஸேநனென்று மோர் பூபதி நீதிதவாமல் ராஜ்யபரிபாலனஞ் செய்துகொண்டு வந்தான். அந்த ராஜனுக்கு ஏழு பிள்ளைகளுண்டு அவர்களில் மூத்தவனுக்கு கம்ஸனென்று பெயர் அவன் பால்யம்முதல் ஜராசந்தன் முதலான துஷ்டர்கள் சினேகமுள்ளவன். அந்த உக்கிறஸேநனுக்கு, தேவகன் என்னு மோர் தம்பியிருந்தான். அவனுக்குத் தேவகி என்னும் ஒரு பெண் பிறந்தாள். அந்த தேவகன் தன் பெண்ணுன தேவகியைத் தன்

தமயனரிடம் ஒப்புவித்து, தபோவனஞ் சென்றுவிட்டார். உக்கிர ஸேநமகாராஜாவுக்குப் பெண்மக்களில்லாததால் அந்த தேவகியிடம் ரொம்ப பிரியம்பாராட்டி, தன் வயிற்றில் பிறந்த பெண்ணைப்போல் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாய் வளர்த்து வந்தார். கம்ஸன்முதலானவர்களும் தன் சொந்த சஹோதரியைப் போல் பாவித்து வந்தார்கள். இப்படியிருக்க தேவகிக்கு விவாஹஞ் செய்யவேண்டிய வயது வந்ததைப்பார்த்து, முன் சூரசேன தேசத்தையும் மதுராபுரியையும் ஆண்டுவந்த சூரசேனமஹா ராஜன் வம்சத்தில் பிறந்த, வஸுதேவருக்கு இந்த தேவகியை விவாஹஞ்செய்து கொடுப்பதாக நிச்சயித்து சுபமுகூர்த்தம் பார்த்து சகல பந்துக்களையும் வரவழித்து, எல்லாரும் கொண் டாடும்படி பகு ஸம்பிரமத்துடன் மதுராபுரியில் தேவகியை வசு தேவருக்குப் பாணிக்கிறஹணஞ் செய்து கொடுத்தார். இந்த தேவகி கல்யாணத்தில் கம்ஸனே உத்ஸாஹத்துடன் தேவகிவஸு தேவரைப் பூஜித்து வந்தவர்களுக்குகந்த சந்தன தாம்பூலத்துடன் பகுமானம் செய்துவிருந்தளித்து ஆடல் பாடல்களுடன் 5, 6 தினம் கல்யாண மஹோத்ஸவத்தை நடத்தினன் பிறகு வசுதேவர் தேவகியுடன் தனதில்லதில் கிரஹப்பிரவேசத்திற்கு புறப் படும்போது உக்ரஸேந மஹாராஜன் அளவற்ற ஸ்ரீதனம் கொடு த்தனுப்பினர். ரொம்ப விசித்திரமாக இரதம் சிங்காரித்து அதில் தேவகி வசுதேவரை சிங்காரத்துடன் உட்காரவைத்து அந்த ரதத் தின் முன் தட்டில் கம்ஸன் உட்கார்ந்து சாரத்தியஞ் செய்தான்.

## (7) திண்டி - ஆதி - தாளம்!

மஹோத்ஸாஹே ப்ரவீதாம்பந்து ராயா
தோறவர்டேஸ்வா நந்தகம்ஸ ராயா-
ரதிம்ஸாரதி ஆபணஜாஹலாஸே!
கரீகௌது காளாகீம் மஹோல்லாஸே!

**அர்த்தம்:-** பந்துசிரேஷ்டனன கம்ஸ மஹாராஜன் ரொம்ப சந்தோஷத்துடன் ராஜவீதியில் ஸாரத்தியம் செய்துகொண்டு போகும்பொழுது அப்போ என்ன நேர்ந்ததென்றல்:-

## (8) ச்லோகம்

பதிப்ரக்ரஹிணம் கம்ஸம் ஆபாஷ் யாஹா சரீரவாக்,!
அஸ்யாஸ்த்வாம்யஷ்டமோ கர்ப்போ ஹந்தாயாம் நீயஸேஜட!!

(அர்த்தம்) ராஜவீதியில் இப்படிக் கம்ஸன் ரதஸாரத்தியம் செய்து கொண்டு போகும்போது, ஆகாயத்தினின்றும் ஓர் அசரீரவாக்கு இவனைக்கூப்பிட்டு பின்வருமாறு ஒருவார்த்தை சொல்லிற்று. அதாவது "ஏ மூடா! கம்ஸா!, இந்த தேவகியின் வயிற்றில் பிறக்கப்போகிற எட்டாவது குழந்தை உன்னைக்கொல்லப்போகிறது." என்னும் வார்த்தையைக் கேட்டு கம்ஸன் என்னசெய்தானென்றால்:-

## (9) ஸாகி - ஆதி

கம்ஸுடோ அஸ மாநபாங்ஜத

ஹதமோலேகரதேகா—அபநாமரண
சுகாவே சாதர பாநகுமாரணலாகா!!

(அர்த்தம்) அந்த அசரீரவாக்கைக் கம்ஸன்கேட்டு மிகுந்த கோபம்கொண்டு இந்த தேவகியை உயிரோடுவிட்டுவிட்டால், இவள் வயிற்றில் ஜனிக்கும் பிள்ளையினால் நமக்கு மரணம் உண்டாகும். இவளை இப்போதே கொன்றுவிடுகிறேன், என்று வலது கையால் கத்தியை உருவிக்கொண்டு இடது கையால் தேவகியின் கூந்தலைக் கைப்போட்டிழுத்தான்.

## (10) ஸீஸ பத்யம்

சதமுநநுந்ந செல்லவிநி .. கம்ஸுடுபட்டி - அலருச்ஸுபட பூமி நட்டமேதாஸே - விருல ஹாரம்புலு - ஸரிலேநி ஸொம்முலு - வதலி மூலகுமூ - சேதரிபடக - ஜெநு லல்லநய்யய்யோ யெநிமேநி வணுகக - கந்நீருதோட னுகலுவரிம்ப - தானுமீகம்ஸ ஸ்திரீ ஹத்தியாலநிபுடு - லட்டிலெனிமிதோ சிசுவுபுட்டிநந்த - தானிதோ நீகு பயமுவத்துவத்து - புட்டின தருவாதனே - நேனு - கம்ஸபூப - நீது

சேதிகே ஸர்யமுகா நித்து நநுத்ஸ - தானுவஸுதேவுடே - ஸமாதான பரசே !!

இதன் கருத்து:- தேரின்மீதுள்ள தன்தங்கையான தேவகியை கம்ஸன் அலறக்கதரக் கீழே இழுத்துத் தள்ளும்போது அவள் தேகததில் அணிந்து கொண்டிருந்த ஆபரணங்கள் வீதியில் மூலைக்குமூலை விழுவதைப்பார்த்து ஜனங்கள் கண்ணீர்ப்பெருக "ஐயையோ! இது என்ன அனியாயம்!" என்று கதறும்போது வசுதேவர் கம்ஸனைப்பார்த்து "ஹே கம்ஸா! கொஞ்சம் பொரு நான் சொல்லும் வார்த்தைகளைக் கேள். வீணில் ஸ்திரீஹத்திபண்ணாதே. அசரீரவாக்கின்படி இவள் வயிற்றில் பிறக்கும் எட்டாவது குழந்தையிடம் உனக்குப் பயமிருக்குமேயாகில் அப்படிப் பிறக்கும் எட்டாவது சிசுவை பிறந்த உடன் ஸத்யமாக உன்கையில் கொடுத்துவிடுகிறேன். நீ பயப்படவேண்டாம். இவளைக்கொல்லாதே விட்டுவிடு." என்று சமாதானம் சொல்லியும் கம்ஸன் கேளாமல் ஆகாயவாக்கை நினைத்து நினைத்து மிகக் கோபம் கொண்டபோது மறுபடியும் வசுதேவர் என்ன செய்தாரென்றால்:

## (11) கந்தம்

ஆபாபசித்தமத்துங் - கோபாக்நிசிகநறு ப்ரத்துங்கொக கொனிதலஸல் - லாபாமிருததாரா விக்ஷேபணமுன கொந்தசாந்து ஜேயுத்ஸு - பலிகெங்.

கருத்து:- அந்தப்பாபியான கம்ஸனுடைய கோபாக்கினிஜ்வாலையைக் கண்டு வஸுதேவர் தன் ஸல்லாபமாகிற அமிருதத்தைத் தெளித்து அணைப்பதற்குச் சில வார்த்தை சொல்லத்தொடங்கினார்.

## (12) ச்லோகம்

மிருத்யுர்ஜன்மவதாம்வீரா தேஹேனஸஹஜாயதே! அத்யவாப்தசதாம்தேவாமிருத்யுர்வைப்ராணிநாம்த்ருவம்! தஹ்பஸ்பாஸ்தே பயம்ஸௌம்ய யத்தி ஸாஹாசரீரவாக்! புத்ரான்ஸமர்ப்பயிஷ்யேஸ்யா யதஸ்தேபயமுத்திம்!!

**கருத்து:-** "ஹே கம்ஸா! பூமியில் மனுஷ்ய ஜன்மாவை அடைந்தவர்கள் தேகத்துடனேயே மிருத்யுவும் உண்டாகிறான். அந்த மிருத்யு தேகத்திலிருக்கும் பிராணனை பிறந்த உடனே, பால்யத்திலோ, யௌவனத்திலோ, கிழத்தன்மையிலோ, நூறுவருஷம் கழித்தோ, பிராணனைக்கட்டாயம் அபகரித்துக்கொண்டு போகிறானென்பது நிச்சயம், அதைத்தடுக்க எவராலும் முடியாது. இப்படிச்சாஸ்வத மில்லாத பிராணனை உத்தேசித்து இந்த ஸ்திரீ ஹத்தி செய்வாருண்டா ஹே கம்ஸா! இப்போது அசரீர வாக்கைக்கேட்டு உனக்குப்பயம் ஏற்படும் விஷயத்தில் இவள் வயிற்றில் எவ்வளவு குழந்தைகள் பிறக்கின்றனவோ அவையனைத்தையும் உன்னிடம் தந்துவிடுகிறேன். நீ பயப்படவேண்டாம் இவளை விட்டுவிடு என்று சொன்ன வஸுதேவர் வார்த்தையைக் கேட்டு கம்ஸன் தேவகியைக் கொல்லுவதை விட்டு தேவகி வஸுதேவரை அழைத்துக்கொண்டுத் தன்னுடைய அரண்மனையில் ஒரு பந்தீகானவில் அவர்களை வசிக்கச்செய்துப் பாதுகார்த்து வந்தான். எப்படியென்றால்.

## (13) திண்டி ருபகம்

உபயதாந்தே மகாதேவி பந்திசாலே!
ரக்ஷணதே டை ஸவிதைத்யபாலே!!
ப்ரதமஜ்ஜாலா திஸபுத்ர தயேவேளே!!
திலாகம்ஸா நேவுநீசிக்ரகாளேப்!!

**கருத்து:-** தேவகி வஸுதேவாளைப் பந்தீகானவில் அடைத்து அசுராம்சம் பொருந்திய சேவகர்களைக்கொண்டு அவர்களைக்காத்து வந்தான்.

அப்படியிருக்கும் காலையில் தேவகீ கர்ப்பம் தரித்து பத்தாவது மாதத்தில் திவ்ய ரூபமுள்ள ஓராண்குழந்தையைப் பெற்றாள். அதைப்பார்த்த உடன் வஸுதேவர் பூர்வம் கம்ஸனிடம் பிரதிக்ஞை செய்தபடி இந்தக்குழந்தையை எடுத்துக்கொண்டுபோய் கம்ஸனிடம் கொடுத்தார். அப்போது என்ன நடந்ததென்றால்:—

## (14) ச்லோகம்

தௌ கம்ஸாய தேவக்யாச்சிசும் ப்ரதமஜம்ந்ருப:! அஷ்டம் ஸரி பும்மத்வா தௌ கம்ஸ: புநச்சிசும்!! ததேதி ஸுதமாதாய யயா வாநக துந்துபி: !! நாப்யநந்தத தத்வாக்ய மஸதோவிஜிதாத்மந:

**கருத்து:-** வஸுதேவர் கம்ஸன் கையில் தேவகியின் முதல் குழந்தையைக் கொடுத்த உடன் அந்தக்குழந்தையின் அழகைப்பார்த்து மனமிறங்கி, தயவுபிறந்து "ஓ வஸுதேவரே, எட்டாவது குழந்தை என்னைக்கொல்லும் என்று அசரீரவாக்கு உண்டானபடியால் இதை எடுத்துக்கொண்டு போய்விடும். இனி பிறப்பதையும் காப்பாற்றும். எட்டாவது குழந்தையைமாத்திரம் என்னிடம் கொண்டு வாரும்" என்று சொல்லி குழந்தையுடன் வஸுதேவரைத் திருப்பி அனுப்பினபோது அந்தக்கம்ஸன் அசத்தாயும் திருட சித்தமில்லாதவனானபடியாலும் வஸுதேவர் அந்தக்கம்ஸன் வார்த்தையை உருதியென்றெண்ணி சந்தோஷிக்கவில்லை.

இப்படிக்கிருக்க, பகவதாக்ஞையால் அந்த தேவகியின் வயிற்றில் ஆறு குழந்தைகள் பிறந்து வளர்ந்து வந்தன. இப்படியிருக்க கம்ஸனிடத்திற்கு ஒரு சமயம் மஹதி என்னும் வீணையைத்தரித்த நாரதமஹரிஷி வந்து சேர்ந்தார். எப்படி வந்தாரென்றால்:—

## (15) சஹாநா — சாபு தாளம்

நாரதமுனிவச்செனு - கம்ஸுநிகடகு [நா]

நாராயணுயநி - நாமமுலேஸ்ஞ்ஸு [நா]

### சரணம்

கட்டெடு ஜடலநு · கரமுநஜெபஸர - மீட்யே வீண - தாபட்டி கனபுடு [நா]

உல்லமுராஞ்ஜலி - ஸ்சல்லகபலுகஸ்சு - கல்லநகுவதோ - மெல்ல மெல்லந [நா]

கோபாலுகிமதி- லோபலதலத்ஸோர்ஸோ - ஜூபககம்ஸூநி - ஜூசி
பொகடுதஸோ (௩)

கருத்து:- நாராயணநாமஸங்கீர்த்தனஞ் செய்யும் நாரதஸ்வாமி தலையில் ஜடையும், கையில் ஜபஸரமும், வீணையையும் வைத்துக் கொண்டு, மனோஹர வார்த்தையாடிக் கொண்டு, கபட மந்தஹாஸத்துடனும் சித்தத்தில் கோவிந்தனை தியானித்துக்கொண்டும், கம்ஸன் தர்பார் வந்து சேர்ந்தார். கம்ஸன் நாரதமுனியை பூஜித்து பீடங்கொடுத்து உட்காரவைத்து பேசிக்கொண்டிருக்கும்போது என்ன நடந்ததென்றால்:-

## (16) ஆர்யா! பியாக் ராகம்!!

நாரதமுனிதோகம்ஸூடு - ஸாரகுமுநநடிசி
னஸங்கதுலெ - ச்செரிககாமுனிவிநி
கோரிதோ - யிட்லநேநு கொப்புநது!!

கருத்து: இப்படி இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது கம்ஸன், நாரதரிடம் தான் தேவகி கல்யாணம் நடத்தி பட்டணப் பிரவேசம் வந்ததும், அசரீரவாக்குஉண்டானதும், தான் தேவகியைக் கொல்ல ஆரம்பித்ததும், வசுதேவர் சமாதானம் செய்து தேவகி வயிற்றில் பிறக்கும் சிசுக்களை தந்துவிடுவதாக சொல்லி அவ்விதம் செய்ததும், தான் எட்டாவது குழந்தைதான் தனக்கு மிருத்யு என்று எண்ணி மைத்த குழந்தைகளை கொல்ல தனக்கு மனம் வரவில்லை யென்பதையும் தான் யோசித்திருக்கிறது சரிதானா என்றும் கேட்ட போது, பிரம்ம சாபத்தால் பூமியில் ஜனித்த மரீசி புத்திராளான இந்த ஆறு குழந்தைகளின் ஜன்மவிடுதலை செய்துவைக்க வேணு மென்று எண்ணி நாரதர் கம்சனிடம் ஒருவார்த்தை சொல்லத் தொடங்கினர் என்னவென்றால் !!

## (17) காபிராகம் - கண்ணிகள் - அடதாளம்

1\. இதியேமி யோசனயிபுடுஜேஸதவு - மதிநுஞ்சிஜூடகமாட
லாடதேவு!!

2 துதநூண்டியொக்க கொடிகாநீவு - வதலுஞ்சு நெக்நக இதியே
யஷ்டமமகு!!

3 புட்டினசிசுவுல நட்டே பாகபெட்டி - சம்பிநாபயமுமா நுநகா !!

4 இட்டுலஹிதமுக - இபுடுதெல்பிதிக - கெட்டிகநம்மூமீ
கனதரயோக !!

5 கோபாலுநிவேடு கொநிபலிகிதிநி - கோபமுயாலகம் ஸபூபாலா!

6 வி.நுநீபாடிகி போநெஜப்பலேநு - நீசுகமுநகை நிஜமுதெல்
யகநு !!

அர்த்தம்:- (1) ஹே கம்சா நீ என்ன இப்படி யோசித்து யேமாந்துபோனாய் ஆழ்ந்த புத்தியுடன், யோசிக்காமல் பேசுகிறாய்! (2) எட்டுபிள்ளைகளை நிறுத்திவைத்து கடைசியிலிருந்து தலைகீழாய் ஒவ்வொன்றாய் எண்ணிப்பார் முதல்குழந்தை 8-வதாக ஆகாதா, இவ்விதம் 8குழந்தைகளையும் 8வது குழந்தையாக கணக்கு வரும்படி எண்ணலாம். ஆகையால் தேவகி கர்ப்பத்தில் பிறக்கும் எல்லாகுழந்தைகளும் உனக்கு மிருத்யு என்று எண்ணிக்கொள்ளு, நீ மிருத்யு பயமில்லாமலிருக்க வேணுமானால் என்ன செய்யவேணுமென்றால் (3) (புட்டின) தேவகிவயிற்றில் பிறக்கும் சிசுக்களையெல்லாம் நீ கொன்றுவிட்டால் உனக்குபயமில்லை. (4) இவ்வித ஹிதத்தை நானுனக்கு சொன்னதை நம்பு (5) பகவானை வேண்டி நானுனக்கு சொன்னேன் என்பேரில் கோபிக்கவேண்டாம். (6) நீ சுகமாயிருப்பதற்காக உண்மையான வார்த்தை சொன்னேன் என்று நாரதர் சொன்ன வார்த்தையைக் கேட்டு நாரதரையனுப்பிவிட்டு, கம்ஸன் கையில் கத்தியை உருவிக்கொண்டு தேவகி வசிக்கும் காராக்கிரஹஞ்சென்று அந்த ஆறு சிசுக்களை வெட்டுவதற்கு தொடங்கும் போது என்ன நடந்ததென்றால்,

## (18) அஞ்சனகீதம் - செஞ்சுருட்டி - ஆதி!!

கன்னதல்லியா - தேவகியபுடோக - சின்னபாலுநி - கெட்டிக பட்டுகொநி - அன்னகம்ஸுநி - மன்னபுசேமனி - மன்னுடே மந்து !!

**அர்த்தம்:-** கம்சன் சிசுக்களை வெட்டும்போது - பெற்றதாயான தேவகி, ஒரு சின்ன குழந்தையை மார்பில் அணைத்துக்கொண்டு தன் தமையனை கம்ஸனை கொல்லாமல்விடும்படி எப்படி கேட்டுக்கொண்டாளென்றால் !!

## (19) திண்டி - காபி - ஆதி !!

கம்ஸா அந்யாயம்யால சேசேவுரா ! ஈசின்னகுற்றினிசம்பந்யாலரா கொன்னிதினமுலைநநுதாளரா ! கன்னுதிறசிஜுடனு லேதுரா!;

**அர்த்தம்:-** ஏ கம்சா ஏன் அன்யாயம் பண்ணுகிறாய். இந்த சின்ன குழந்தையை எதற்கு கொல்லுகிறாய். கொஞ்சதினம் பொரு இன்னும் இக்குழந்தைக்கு கண்திறந்து பார்க்கக்கூடதெரியவில்லையடா ; என்பதைக் கேட்டும் கம்ஸனுக்கு தயவுவராமலிருக்கும் போது மருபடியும் தேவகி கதருகிறாள் !!

## (20) திண்டி ரூபகம்

த்ஸனுதாக கத்ருஞ்சராதுரா - கன்னகடுபு எந்தோவுடுகேனுரா நன்னுசம்பி நாபிட்ள நிவ்வரா - நின்னு வேடத தயசாயராதா-

**கருத்து:-** அண்ணா கம்ஸா ; இப்போதான் குழந்தை பால்குடிக்கின்றது. பால்குடிக்கும்போது குழந்தையைக் கொல்லலாகாது. பெற்ற என்வயர் துடிக்கிறதே. என்னைக்கொன்று இக்குழந்தையை விட்டுவிடு. உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன்; நீ கொஞ்சம் தயவு செய்யக்கூடாதா? “ என்று வேண்டி மறுபடியும் தேவகி கம்ஸனிடம் கதறுகிறாள்.

## (21) வேறுதிண்டி ரூபகம்

ஒக சிந்நபாலுநிபிக்ஷ மிவ்வரா - தனகந்யு லெவ்வருதிக்கு லேதுரா - த்ஸாலநின்னு நம்மியுன்னடிதானிரா - ஓரந்நா மும் மாடிகிம் ரொக்கேனுரா!

**கருத்து:-** “ஏ அண்ணா கம்ஸா ! உன் காலில் விழுகிறேன். உன்னையே நம்பினேன்; எனக்கு வேறுதிக்கில்லை. ஒரு குழந்தையை

யாவது எனக்கு பிச்சை தரவேண்டும்" என்று தேவகீ கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் கம்ஸனுக்குக் கொஞ்சமேனும் தயவில்லாமல் என்ன செய்தானென்றால்:—

## (22) ஆர்யா — நாதநாமக்ரியை

தேனே கம்ஸேவதிலா - ப்ரதமஸூதேந்த ஸேஞ்சஷோட !
பகினீபதிவாஞ்சவிலாஜானும் தேவுனி கேவுனி புத்ரதனலாஞ்சே !!

**கருத்து**:- தயவில்லாத அந்த கம்ஸன் தேவகியின் ஒன்று முதல் ஆறு குழந்தைகளைக் கண்டம்துண்டம் செய்து வதித்து வீடு சென்றுவிட்டான். அதை நேரிலே பார்த்து தேவகி ரொம்ப துக்கத்துடன் புலம்ப ஆரம்பித்தாள்.

## (23) அஸாவேரி - ஆதி

ஏமனிதாளுதுனே - நாகனுலாரா-
எட்ளுத்ஸூபுத்ஸூ சுண்டுனே- (ஏ)
பூமிலோ னேபாபி - புட்டகசிசுவுல
நாமுந்து நேஜும்ப - நம்மயிவ்யாள (ஏ)

காராக்ருஹமுன - கடகண்ட்லு பட்டுடாய - ஆறுபிட்லலு புட்டி-
அந்யாயமுகபோய - வாரல கனகோபாலுடு கானேன - ஊத்
ஸூடுடகே - உகிகிபாரமாய (ஏ)

**கருத்து**:-காரக்ருகத்திலிருந்து தேவகீ கதருகிறாள். ஹே கோபால! நான் எப்படி சகிப்பேன். எப்படி என் கண்ணாலேபார்ப்பேன். ஐயோ! என்னைப்போல பாபி இப்பூமியிலேயே இல்லை. நான் பெற்ற பிள்ளைகளை என் முன்னிலையிலேயே கம்ஸன் கொன்றானே! காரா க்ருகத்தில் வசிக்கும்படி தெய்வம் என் தலையிலெழுதி விட்டதே! நான் பெற்ற ஆறுபிள்ளைகளும் அநியாயமாகப் போய்விட்டதே! ஹே கோவிந்தா! குழந்தைகளைக் காப்பாற்றுவது உனக்கு ஒரு பெரிய பாரமா! என்னை இப்படி அலக்ஷியம் செய்யலாமா! என்று கதரி ஸ்தோத்திரம் செய்தாள். பகவானுக்கு மனம் உருகும்படி அதேமாதிரி த்தியாக அய்யாவாள் எழுதுகிறார் !!

## (24) ஜுஜாவளி - ஆதி !

பராகுஜேஸின - நிகேமிபலமுகலிகொா - பராத்பரா (பரா)
ஸுராவன ஸுரோத்தமாவ ராஜராபகன நாயெட (பரா)
முதான நீதுபதார விந்தமுலநு பட்டிம் ரொக்கலேதா -
நிதானரூபதரிதாபுலேது உதார ஸ்ரீத்யாகராஜநுத (பரா)

**அர்த்தம்:-** ஹே பாரத்பர - ஸுராவன - ஸுரோக்தம்ராபகலாய் சந்தோஷத்துடன் உனது பாதாரவி ந்தங்களில் நான் நமஸ் கரிக்க வில்லையா - ஹே திவ்யஸ்வரூப - ஹேஉதாரா - தியாகராஜநுத எனக்கு உன் பாதாரவிந்தத்தை தவிர வேறு வழியில்லே என்று நம்பின என் விஷயத்தில் நீ அலக்ஷியஞ்செய்தால் உனக்கு என்ன பிரயோஜனம் உண்டாகும் - அப்படி அலக்ஷியம் செய்யாமல் என்னை ரெக்ஷிக்கவேணும்!! இந்த மாதிரி தேவகீ கதரும்போது, பக்தவத்ஸலன் வைகுண்டத்தில் மனமிறங்கி சீக்கிறம் தேவகீ வஸுதேவர்களை அநுக்கிறஹிக்க வேணுமென்று எண்ணி தன் பீடமான ஆதிசேஷனைக் கூப்பிட்டுச் சொல்லுகிறுர்!!

## (25) ஆர்யா !

வேவேகமேமன மித்தரு - யீவஸுதநு புட்டவலயு நிபுடநசு
ஆவல வைகுண்டம்புன - பாவஜஜநகுண்டுபலி கெபணிபதிகிந்!

**அர்த்தம்:-** வைகுண்டத்தில் - மங்மதபிதாவான ஸ்ரீமந் நாராய ணன் - ஆதிசேஷனைக் கூப்பிட்டு - ஹே ஆதிசேஷ - நாமிருவரும் - இந்த பூமியில் வேகமாய் அவதரிக்க வேணுமென்று சொல்லவே ஆதிசேஷன் பகவானைப்பார்த்து பதில் சொன்னது என்ன வென்றுல்:-

## (26) லாவணி - ஆதி

1. தாளலேதய்யா தொலிஜந்ம கஷ்டமுல்தலசுலேனு ஸுவரா!
   யீவேளநுவிநாவே ரொக்கரிதோ வெடலுமய்யாபவஹரா!
2. தாளலேது பதமுலகும்ரொக்யத - தயசெயுமுதேவரா!
   வைவேனு கலருநே - நெந்தவாடநு - வெறசிநாநுசுபகரா!!

3. ஆஹாரமு நிதுரயுலேகநே - நல்லாடக நடவிநி ஹாஹா
ராவண தனயுநி யேமனி யிபுடுகலபூமினி!!

**அர்த்தம்:**-ஆதிசேஷன் சொல்லுகிறார்(1)ஹேஸர்வரா-பவஹரா முன்தாங்கள் ராமாவதாரஞ் செய்தகாலத்தில் நான்தங்களுக்கு தம்பியான லக்ஷ்மணனாக பிறந்து பட்டகஷ்டத்தை இப்போ நினைத்தாலும் தாங்கமுடியவில்லை- இந்தவேளையில் என்னை விட்டு விடுங்கள்- வேறுயாரையாவது அழைத்துக்கொண்டு அவதாரஞ் செய்யுங்கள்!! ஹே ஆதிசேஷ உன்னைபோல் வேறுயாரு இருக்கிறார்கள்- நீதான் பின்னோடு வறவேணும் என்று சொன்ன பகவானை பார்த்து மறுபடி சொல்லுகிறார் (2) ஹேதேவ என்னாலே முடியாது இதோ தங்கள் பாதங்களுக்கு அநேக கோடி வந்தனஞ் செய்கிறேன் என்னைக் கூப்பிடவேண்டாம் தங்களுக்கு வேறு தாஸாளில்லையா- பதினாயிரம் பேரிருக்கிறார்களே- நான் முன்அவதாரத்தில் ரொம்ப கஷ்டப்பட்டு பயப் பட்டவன்- தயவு பண்ணுங்கள்: என்று சொன்ன ஆதிசேஷனைப்பார்த்து பகவான்ராமாவதாரத்தில் ஹே ஆதிசேஷ நீ என்ன கஷ்டமடைந்தாய் - சொல்லு கேழ்க்கிறேன் - என்ற பகவானிடம் பணீந்திரன் சொல்லுகிறார்! (3) ஹே பிரபோ - தாங்கள் பூர்வம் ராமவதாரகாலத்தில் பித்ருவாக்கிய பரிபாலனம் என்னும் ஸாமான்ய தர்மத்தை அனுஷ்டிக்க வனவாஸத்துக்கு புறப்பட்டபோது நான் பட்ட கஷ்டத்தை நினைத்தால் எனக்கு ரொம்ப நடுக்கமாயிருக்கிறது. (ஆஹாரமுநி × பூமினி) நான் முந்தி தங்களுக்குத் தம்பியான லக்ஷ்மணனாக பிறந்து - ஹா - ஹா - கஷ்டம் கஷ்டம் ராவணன் பிள்ளையான இந்திரஜித் 12-வருஷம் ஊணுறக்கமில்லாதவர்களால் தனக்கு மரணமுண்டாக வேணுமென்று பிரம்மாவினிடம் வரம்வாங்கினதைக் கேழ்வைப்பட்டு அதற்காக நான் தாங்கள் வனவாஸம்செய்தபோது ஆஹாரம்நித்ரையில்லாமல்கஷ்டப்பட்டேனே அது உங்களுக்குத் தெரியுமா-3 நாள் முன் வைத்தகால் பின்வாங்காமல் இந்திரஜித்தோடே யுத்தஞ் செய்து அவனை வதஞ்செய்ய என்ன பாடுபட்டிருப்பேன் அது உங்களுக்குத் தெரியுமா - பஞ்சவடீதீரத்தில் நான் சீதாதேவியின் ஏச்சு கேட்டிருப்பேன்தெரியுமா- தங்களால் நான் எவ்வளவோ அவமானப்பட்டிருக்கிறேன் அது என் நெஞ்சுக்குத் தெரியும். குரங்கு ராஜனை

ஸுக்ரீவன் முன்னிலையில் (நஸர்வேபரசோபமா:) என்று அஹோர ராத்ரம் நான் தங்களுக்கு வனத்தில் பணிவிடை செய்துகொண்டிருக்கும்போது பரதனுக்குச் சமானமான தம்பி யேது என்றும் என்னை எவ்வளவோ தாங்கள் அவமானஞ் செய்யவில்லையா. தவிற, தாங்கள் ராஜ்யபரிபாலனம் பண்ணும்போது ஒருசமயம் என்னை அஜாரவாசலிலிருந்து ஒருவரையும் உள்ளே விடாதேயென்று சொல்லி வெளியில் நிறுத்திவிட்டு தாங்கள் தர்பாரில் தர்மாராஜாவோடு ரஹஸ்யம் பேசிக்கொண்டிருக்கும்போது தபோவனத்திலிருந்து, துர்வாசமஹரிஷி அயோத்தியா பட்டணத்திற்கு வந்து அஜாரவாசலில் நிற்கிற என்னைப்பார்த்து ஹே லக்ஷ்மண ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தி எங்கே நான் அவரைப்பார்க்கவேணும் - இத்தனை நாளாய் போஜனமில்லாமல் தபஸ்செய்தேன் - பாரணை செய்ய வேணும் - பசி ரொம்ப ஜாஸ்தியாயிருக்கிறது என்று என்னை மெற நான் துர்வாசருக்கு எவ்வளவோ சமாதானஞ் செய்து சேர்பத்தால் என்னை சபிக்க ஆரம்பிக்கத் தங்கள் சமயத்தைப்பார்க்க நான் மெள்ள உள்ளே வந்து பார்க்கும்போது தாங்கள் என்பேரில் கடுஞ் சினங்கொண்டு என்னைப்பார்த்து அடே பிராத்ருத்ரோஹி லக்ஷ்மண என் ஆக்ஞையைமீறி உன்னையார் உள்ளே வறச்சொன்னார் சீ சீ என் முன்னிலையில் நிற்காதே ஓடிப்போ என்று என்னை மிறட்ட உடனே நான் ஸரயூநதியில் பிரவேசித்து இவ்விடம் வந்தேனல்லவா! ஆகையால் தங்களோடு நான் பூர்வம் பட்டபாடு போருமென்று சொன்ன ஆதிசேஷன் வார்த்தையைக்கேட்டு பகவான் தயவு கொண்டு என்ன சொன்னாரென்றால்:-

## (27) சந்தம் ரூபகம்

முந்து தம்முடை புட்டி நாவுகா - என்னிகஷ்டமுல் நின்னுஜேரக-
நீவுயன்னகா - நிபுடு ஜேஸதா - ஏவகன்மரீ - யாதநன்ஸதா - கலிகி
தேவகீ - கர்ப்ப மந்துன !! செலகு மீயன - சேஷபடேகின !!

**கருத்து:-** "ஏ ஆதிசேஷா! நீ முந்தி தம்பியாய் பிறந்தபடியால் அளவற்ற சிறமமடைந்தாய், நீ இந்த அவதாரத்தில் எனக்கு தமயனாக அவதரிப்பாயாக. நான் உனக்கு தம்பியாக அவதரித்து முன் நீ எனக்குச் செய்த மரியாதைகளையெல்லாம் நான் உனக்குச்

செய்துவிடுகிறேன். இப்போ தேவகியின் வயிற்றில் ஏழாவது கர்ப்பமாக அவதரிப்பாயாக.” என்று ஆக்ஞாபித்த பகவானுடைய நியமனப்படி, ஆதிசேஷன் தேவகிகர்ப்பத்தை அடைந்தார்.

பிறகு பகவான் என்ன செய்தாரென்றால்:—

## (28) கீதி யதுகுல காம்போதி

ஐதுநெலலோ தேவகி யதிவகர்ப்ப - மட்டெ ரோகிணீகடுபுன - புட்டு மனுத்ஸ - மாதவுடெபல்கின யோகமாயதோனு - சேஷ டாக்ஷணம்பிட்னு ஜேஸே !!

**கருத்து:-** ஆதிசேஷன் தேவகீ கர்ப்பத்தில் ஐந்து மாதம் இருந்த உடனே, பகவதாஞ்ஞையால் யோகமாயை தேவகீ கர்ப்பத்திலிருந்து சேஷாம்ஸ கர்ப்பபிண்டத்தை எடுத்து நந்தகோகுலத்திலிருக்கிற வஸுதேவருடைய மூத்தபத்தினியான ரோகிணி கர்ப்பத்தில் வைத்துவிட பூர்ண மாஸத்தில் ரோகிணீ கர்ப்பத்திலிருந்து, சேஷாம்ஸமான பலராமர் ஆவிர்ப்பவித்தார்.

## (29) கமாஸ் சாபு தாளம்

பாலுடுதயிஞ்சினாடு - மநபாமா ரோகிணிகி நேடு (பா)
மேலைந தானம் புலு - வேகஜேஸேநந்தருபுடு (பா)
பலராமுடனுத்ஸனுபேரு - மதிரஞ்ஜில்லகாயுஞ்சேரு (பா)

**கருத்து.-** பலராமர் அவதரித்த உடன், நந்த கோகுலத்தில் நந்த கோபன் அனனதான கோதானதிகள் செய்து பலராம ஜயந்தி மஹோத்ஸவத்தைக் கொண்டாடினன். சிலகாலம் கழித்து, பகவான் யோகமாயையை யசோதை கர்ப்பத்தில் வசிக்கச் செய்து தான் வஸுதேவர் மூலமாய்த் தேவகீ கர்ப்பத்தில் எட்டாவது கர்ப்பமாக வசிக்கும்போது தேவகீதேவியின் கர்ப்பத்தில் எப்போதுமில்லாத சோபை ஏற்பட்டதைப் பார்த்து ரக்ஷகாள் கம்ஸனிடம் சொல்லுகிறார்கள்.

## (30) பந்துவராளி - கண்ணிகள்

1. தேவகி நிஜஉடரே மீரு - தேவதுலெல்லபொகடேரு (தே)

2. ரவிகோடிப்ரகாசமுதிரு - மதிரஞ்ஜில்லிஞ்சி நாரு (தே)
3. அன்னமெ செல்லதிஸ-மந்த - அட்டெ - தாமெனு - ஸொ லொநந்த (தே)
4 ஸன்னமைன நடுமிஸ- மந்த - அட்டெஜாட கபலமைய னுகாந்த (தே)
5. யேவேளநு நிதுரிஞ்செனு! யெர்ரொணி மேனு தெல்ல நாயனே (தே)
6. வேவேகமே ஜூபிர்த்ஸுர்த்ஸுகன்னுல்லு - வெலதிகி - நலுபைய்யனே (தே)

**கருத்து:-** 1. தேவகியின் கர்ப்பசின்னத்தை அவர்கள் கம்ஸ னிடம் வர்ணிக்கிறார்கள். "ஏப்ரபோ! கம்ஸமஹாராஜனே! இந்த தடவை கர்ப்பமாயிருக்கிற தேவகியை வந்து பாருங்கள். தேவதைகளால் புகழத்தக்க கோடி ஸூர்யப்ரகாசம் நிறைந்தத் திரு மேனியுடன் விளங்குகிறாள். 2. அன்னம் செல்லவில்லை, தேகம் மெலிந்திருக்கிறது. 3. க்ருசமான வயிற் கனத்திருக்கிறது. எந்த வேளையிலும் நித்திரை செய்கிறாள். தேகம் வெளுத்திருக்கிறது. வேகமாய்ப் பார்க்கும் கண்களைச் சுற்றிக் கருத்திருக்கிறது." என்றும் தேவகியின் கர்ப்பசின்னத்தை வர்ணிக்கும்போது, கம்ஸன் கேட்டு, நேரில்வந்து தேவகியைப் பார்த்து என்ன சொன்னானென்றால்:–

## (31) ச்லோகம்

தாம் வீக்ஷ்யகம்ஸ: ப்ரபயாஜிதாந்தராம் வீரோசயந்தீம் பவநம் ஸுசிஸ்மிதாம்! ஆஹைஷமே ப்ராண ஹரோ ஹரிர்க்குஹாம் த்ருவம் ச்ரிதோயம் யந்நபுரேய மீத்ருசீ !!

**கருத்து:-** நேரில் கம்ஸன் வந்து தேவகியின் தேக காந்தியால் அந்தக்கட்டடமேப்ரகாசிப்பதையும் அவள் முகத்தின் மந்தஹாஸத்தையும் பார்த்து ரக்ஷகர்களைக் கூப்பிட்டு "ஹே காவலாளிகளே! இந்தத் தேவகியினுடைய கர்ப்பத்தில் யானையைக்கொல்லும் சிங்கம் குகையிலிருப்பதுபோல் என்னைக் கொல்லும் ஹரி இவளுடைய கர்ப்பத்தில் வசிக்கிறார். இது நிச்சயம். முந்தி இவள் கர்ப்பவதியா

யிருந்தபோது இவ்வளவு காந்தி உடையவளாக இல்லை. ஆகை யால் ஜாக்கிறதையாய் இவள் வசிக்கும் கிரகத்தைக் காருங்கள். சிசு பிறந்த உடனேயே என்னிடம் ஓடிவந்து தெரியப்படுத்துங் கள்." என்று கட்டளையிட்டுத் தன் இல்லம் சென்ருன். அப் போது தேவதைகள் தேவகியின் கர்ப்பத்தில் வசிக்கும் பகவானை ஸ்துதிக்கிருர்கள்.

## (32) திண்டி - ஆதி தாளம்

விமாநாஞ்சீ ஜாஹலீ நபீம்தட - அமரஹர்ஷே வர்ஷதீ ஸுமநவிரு ஷ்டீ ! விதிப்ரமுகஹி - ஹோவுநி - ஹ்ருஷ்டபோடி - பந்திசாளே பாதலே தேவகோடி. !!

கருத்து:- ஆகாசத்தில் விமானத்திலேறி தேவதைகள் சந்தோஷத் தால் பூமாரி சொரிந்தார்கள். பிரம்மதேவன் முதலானவர்கள் பந்திகானுவுக்கு வந்து ஸ்துதித்தார்கள் !!

## (33) ச்லோகம்

த்வமேகஏவாஸ்யஸத: ப்ரஸூதி: த்வம் ஸந்நிதா
நம்த்வமநுக்ரஹஸ்ச ! த்வந்மாயயா ஸம்வ்ருத
சேதஸஸ் த்வாம்பச்யந்தி நாநா நவிபஸ்சிதோ யே!!

கருத்து:- ஹே பிரபோ இந்த உலகத்திற்கு தாங்களொருவரே உத்பத்திஸ்தானம !! ஸ்திதிஸம்ஹாரமும் தங்களாலேதான் உண் டாகிறது. தங்கள் மாயையால் மயங்கின சித்தமுள்ள வித்வான் களும் தங்களை தானறியாமலிருக்கிருர்கள் !! மறுபடியும் ஸ்துதிக்கி ருர்கள்.

## (34) மோகனம் ஆதி

(பல்லவி.) பவநுத நாஹ்ருதயமுன - ரமிஞ்சிபடலிகதீர (ப)

(அ - பல்லவி) பவதாரகநாதோ பஹுபல்கின
படலிகதீர கமல (ப)

(சரணம்) பவந ஸுதப்ரியதனகைதிரிகின
படலி கதீர பவனமுஜேரி
நனுவெரபிஞ்சின படலிகதீர
கமலஸம் (பவ)

இந்தமாதிரி தேவதைகள் பலவிதம் ஸ்துதித்துத் தங்களிருப்பிடஞ்சென்றனர்!!

## (35) கீதி! ஆனந்தபைரவி!

ச்ராவணம்புக்ருஷ்ணபக்ஷாஷ்டமியுந! காகரோஹிணி வ்ருஷப லக்னம்புநந்த்ரு! டுச்சமுநரேயுத்வாபரயுக முநந்து! விஷ்ணு தேவுடு ஜநியிஞ்சே க்ருஷ்ணுடனுச்சு!!

**கருத்து:-** த்வாபர சிராவண கிருஷ்ணஷ்டமியில் அர்த்தராத்திரியில் ரோஹிணீ நக்ஷத்திரம் கூடிய விருஷப லக்னத்தில் விஷ்ணுதேவன் - க்ருஷ்ணமூர்த்தியாக தேவகிதேவியிடம் அவதரித்தார்!!

## (36) ச்லோகம்

தமத்புதம் பாலகமம்புஜேக்ஷணம் சதுர்புஜம் சங்ககதாதிசோபிதம்! ஸ்ரீ வத்ஸலக்ஷ்மம் களசோபி கௌஸ்துபம் பீதாம்பரம் ஸாந்த்ரபயோத ஸௌபகம்!! மஹார்ஹவைடூர்ய கிரீடகுண்டலத் விஷாபரிஷ்வக்த ஸஹஸ்ரகுந்தலம்! உத்தாமகாஞ்சியங்கத கங்கணாதி பிர்விரோசமானம் வஸுதேவஐக்ஷத!! இதை நிருபணக்காரர் - ஸீஸபத்யதில் வர்ணிக்கிறார்!!

## (37) ஸீஸ பத்யம்!

நீரதம்புலகாந்தி நிரஸிம்பதகினட்டி மெருகைன நல்ல நீமேனுவாடு! மகரகுண்டல காந்திமரிதகத்தகமனி மிருதுகபோல முலபைமெறயு வாடு! சிருநவ்வுலுலுககா ஸ்ரீங்காரமுக பாலமுத்து காருத்ஸு நுண்டு மோமுவாடு! காமுனசங்கசக்ரமுலு தரியிஞ்சி பீதாம்பரம்புசோபில்லுவாடு! தரநு ஸ்ரீவத்ஸகௌஸ்து பதரமுவாடு! அப்ஜநேத்ருண்டு வனமாலியையினவாடு! வேணுகானவிநோதுடைவெலயிவாடு! அட்டிதேவுனி வஸுதேவுடபுடகனெநு!!

**கருத்து:-** வசுதேவர் அந்த பகவானுடைய திவ்யஸ்வரூபத்தில் நீலமேகம்போல் தேஹ காந்தியும் - நான்கு கைகளும் காதுகுண்டலத்திலுள்ள மரகதம் கன்னத்தில் ஜ்வலிக்க - மந்தஹாஸத்தால் முகம்விளங்க, சங்கம் சக்கிரம் - கதை - சார்ங்கம் நான்கு கைகளில்

பிரகாசிக்க - பீதாம்பரதாரியாய் - கமலக்கண்ணனுக அவதரித்த ஸ்ரீய:பதியை ஸ்தோத்திரம் பண்ணுகிறுர் !!

## (38) தீக்ஷிதரவாள் கிருதி

### பூர்ணசந்திரிகை ராகம் - ரூபகம்!

சங்கசக்ரகதாபாணி மஹம்வந்தே - சார்ங்க நந்தக கௌஸ்துப தாரிணம் வந்தே(ஸ்ரீசம்) பங்கேருஹசரணம் பத்மாவதீ ரமணம் - ஸங்கடாபஹாரணம் - ஸதாபக்த பரணம் - குங்கும பங்கிலகாத்திரம் - பங்கஜ விசால நேத்திரம் - சங்கர ஸந்நுதிபாத்ரம் - வெங்கடவரதக்ஷேத்ரம் (சங்க)

சரணம்:- கஜேந்தரஸம் ரக்ஷணம் - கருடவாயு விசக்ஷணம் - அமிருதஸாரபக்ஷணம் - அஜாமிளாப்ரப்ருத்யரே - கதாஸாளீ கந்தராணீபஜே பூர்ணசந்திரிகாங்க - குருகுஹமாந்த:கரண - குஜதிக்ரஹவிநுதம் - விரஜாநதீதடஸ்திதம் ஸஜாதியாதிரஹிதம் நிஜாநந்தபோதஹிதம் [சங்க]

அவதாரிகை:- இவ்விதம் வசுதேவரும் ஸ்தோத்திரம் பண்ணும்போது - சதுர்புஜரான பகவான் அவர்களை பார்த்து உங்களுக்கு என்ன வரம் வேண்டுமோ அதைக் கேளுங்கள் தருகிறேன் என்று சொல்ல அவர்கள் ஹே பிரபோ தங்கள் சரணகமலங்களில் எங்களுக்கு எப்போதும் த்ருடபக்தியிருக்கவேண்டும் - எங்களுக்கு தாங்கள் புத்திராளாகபிறக்க, நாங்கள் முன் ஜன்மாவில் என்ன புண்யஞ் செய்தோமோ என்று கேட்கும்போது பகவான் தேவகீ வஸுதேவாளிடத்தில் தெரிவிக்கிறுர் !!

## (39) காபி - பதம் - ஆதி !!

1. தேவகீஸி போலிலே - பகவந்தா - துமச்யா - புண்யாநாஹீ அந்த !!
2. ப்ரதமஜந்மி - ப்ரச்னிஹோ - நாமதுஜே ! வஸுதேவ - ஸுத பாநாமஜாஸே !!
3. த்விதீயஜந்மீ - ஜாலீஸே - அதிதி வஸுதேவ - கச்யபமஹாமதீ !!

**கருத்து:-** பகவான் தேவகி வஸுதேவாளிடத்தில் சொல்லுகிறார் ஹே தேவகியே வஸுதேவரே - நீங்களிருவர்களும் முன் ஜன்மாவில் அளவற்ற புண்யஞ் செய்தவர்கள் - முதல் ஜன்மத்தில் வஸுதேவர் ஸுதஸ் என்னும் ரிஷியாகவும் - தேவகி - ப்ரச்னி என்னும் பெயர் கொண்டு அவர் பத்நியாகவிருக்க அப்போ நான் - ப்ரச்னி கர்பனென்று பெயர் கொண்டு அவதரித்தேன் -

இரண்டாவது ஜன்மாவில் நீங்கள் அதிதிகாச்யபாளாக ஆனீர்கள் அப்போ நான் வாமனர் என்று பெயருடன் அவதரித்தேன் - இப்போ - தேவகி வஸுதேவாளாக பிறந்தீர்கள் - இப்போ உங்களுக்கு கிருஷ்ணன் யென்று பெயருள்ள பிள்ளையாக மூன்றுவது அவதாரம் செய்தேன் இப்போ நீங்கள் கேட்டுக்கொண்ட பிறகாரம் ஹரிசரணத்தில் உங்களுக்கு த்ருடபக்தி உண்டாகும்படி அனுக்கிறஹம் பண்ணினேன் - இன்னம் என்ன செய்ய வேணும் என்று கேட்ட போது அவாள் என்ன சொன்னார் களென்றால் !!

## (40) சுலோகம்

**உபஸம்ஹர** விச்வாத்மந் ஏதத்ரூபம லௌகிகம் ! தர்சயஸ்வமஹாநந்தம் பாலபாவம் ஸுகோமளம் !!

**கருத்து:-** ஹே பிரபோ - உலகத்தில்லாத நாலுகையுள்ள தங்களது இந்த ரூபத்தை மறைத்து அழகாயும் மஹாநந்த ஜநகமான பாலகிருஷ்ணஸ்வரூபத்தைக் காண்பிக்க வேணும் என்று பிரார்த்தித்த உடனே பகவான் ஸ்வேச்சாசக்தியால் ப்ராகிருத சிசுவை போல் உருவந்தரித்ததைப் பார்த்து கம்ஸன் வந்துவிடுவானே என்று பயந்த வஸுதேவரைப்பார்த்து பகவான் சொல்லுகிறார் !!

## (41) கேதாரம் - ஸுகி !

1. இந்துரா, வஸுதேவ - சிசுவுநெத்துக - நந்தாலயமுநநு - நநுவிடிசி - அந்துந்நசிசுவுநு - பொந்துகசேகொநி - அந்தமுகாதெச்சியிந்துஞ்சுமீ !!

2. அந்துருலோகுலு - யெந்தமிதெலியக - யுந்துருநாமா - யநுந்தகிலி - யெந்துந்நுவெருவகு - முந்தடிதலுபுலு - நந்தந்தமிதாவக - கநதுவநே !!

**கருத்து:-** (1) ஓய் வசுதேவரே இங்கேவந்து குழந்தையான என்னை யெடுத்து நந்தகோகுலம் சென்று என்னை அவ்விடத்தில் விட்டு விட்டு அங்கிருக்கும் என் மாயையான சிசுவை எடுத்துக்கொண்டு இவ்விடம் வந்துசேரும் - (2) நீர் திரும்பி வருகிறவரையிலும் என் மாயாபிரபாவத்தாலே எல்லா ஜனங்களும் ஒன்றும் தெரியாதவர்கள் போல் மயங்கிக் கிடப்பார்கள். கோபுரவாசக்கதவுகள் அந்தப் புரக்கதவுகள் தானுகத்திறந்து கொள்ளும் என்று சொல்லி தன்னை நந்தகோகுலம் சேர்க்கும்படி பகவான் வசுதேவருக்கு உத்திரவு செய்ததும் வசுதேவர்என்னசெய்தாரென்றால் !!

## (42) ஷி கேதாரம் ஸாகி அடதாளம்

1. வஸுதேவுடாவேள - சிசுவுநெத்துகொநி - வெஸகா கோகுலமு - வெடலனு - ஜனுலுப்ரஞுயுல்யாக - ஜடதநுண்டகனு - கனமைநசீ கடியுவாநலோ !!

2. தலுபுலெல்லநவிடி - தாளகாயமுனலோ - அருகுலேகனுதிகி - யதடேகக - ஸாதகமைநதீ - ஜலமு ஸ்வல்பமாய - மாதவாங்குகுலொஸக மள்ளிபொங்கே !

3. காயுகமுனுதாச்சி - கநடுதாபொடுகுன - முரவைரிநெத்திதாமுணிகெநு - அலபானு டொகபாத - மட்டேவேலவேசி - ஜலமுனனும்பெனு - ஜநகுநகை -

4. ஜலகஷ்டமுனுதீரி - அலகோகுலமுஜேரி - ஜலஜாக்ஷுநிவாரி செந்தநொஞ்சே - அந்துன்ன சிசுவுனி முந்துகாசேகொநி - பொந்துகவஸுதேவு - டிந்துவச்சே !!

**கருத்து:-** இருட்டும் மழையுமுள்ள அந்த அர்த்தராத்திரி வேளையில் வஸுதேவர் அச்சிசுவை எடுத்துக்கொண்டு மதுராபுரியிலிருந்து கோகுலம் செல்லும்போது ஜனங்கள் ஞாபகமற்றுத் தூங்கினர்கள். கதவுகள் தானுகத்திறந்துகொண்டன. யமுனை ஜலத்தை ஒதுக்கி வழிவிட்டது. யமுனை நடுவில் போகும்போது பகவத்சரணத்தைத் தொடுவதற்கு யமுனநதி பொங்கிற்று. (3)

(கரயுகமுனு...) வஸுதேவர் கையிலுள்ள குழந்தையுடன் கையை தூக்கியும் ஜலம் பொங்க அத்தீர்த்தத்தில் மூழ்கிப்போனார் அக் குழந்தைத் தன் காலை தொங்கவிட்டு ஜலத்தில் நனைத்த உடன், (4) (ஜலகெஷ்டமுனுதீரி) ஜலம் குறைந்திட அவர் கோகுலம் சேர்ந்து ஸ்ரீ கிருஷ்ணனை யசோதையிடம் விட்டு அங்குள்ள மாயா சிசுவை எடுத்துக்கொண்டு திரும்பி ஒருவர்கண்ணுக்கும் புலப் படாமல் மதுராபுரிக்கு வந்து, அந்த மாயா சிசுவைத் சேவகியி னிடம் கொடுத்த உடனே திறந்திருந்த கதவுகள் மூடிக்கொண்டன யோகமாயையான சிசு, க்வா - க்வா - என்று சப்தித்தது. பந்தி கான காவலாளிகள் விழித்துக்கொண்டார்கள்.

## (43) தோட்டு.

ஸுருலெல்லனு - லேச்சிரீ - காராக்ருஹமுனு - ஜுசிரீ-
ஸரகுண - சிசுவுனா - கனுகொனினதே !! சாருலுவீருனிசேரிவ - யிஞ்சிரி - திருடைன கம்ஸுடு பாரமைனராதியை வர சிசுபை காவிஸர நபுடதி - பாரியாகாசமு - ஜேரிதாபல் கெனு !!

**கருத்து:-** ஸுரார்கள் எழுந்திருந்து காரகிருகத்தைப் பார்த்து சீக்கிரமாக அவ்விடத்திலுள்ள குழந்தைபைக்கண்டு வேகமாய்ப் புறப்பட்டு கம்ஸனிடம் குழந்தை பிறந்த சங்கதியைத் தெரிவித்தார் கள். அதுகேட்டு கம்ஸன் ஓடிவந்து தேவகி கிருகம்வந்து குழந் தையைக் கொல்ல ஆரம்பிக்கும்போது தேவகி கம்ஸனிடம் பிரார்த் தித்துச் சொல்லுகிறாள்.

## (44) அஸாவேரி - சாபு,

அண்ணாவே கஞ்சனே - அண்ணாவே ரஞ்சனே - அண்ணா பெண் குழந்தையைக் கொல்லாதே - அண்ணா உன் மருமகளாம் — பெண் ணுச்சே இவளையும் - கொல்லொண்ணாதய்யனே .. கிருபைகூரும் மெய்யனே !!

**வசனம்:-** இவ்விதம் தேவகிப் பிரார்த்தித்தும் கம்ஸனுக்கு மன மிறங்காமல் மாயையின் காலைப்பிடித்திழுத்து சுழற்றிக் கல்வில்

அடிக்க ஆரம்பிக்கும்போது அவன் கையிலிருந்து மாயை திடீரென்று உயரக்கிளம்பி துர்க்காஸ்வரூபத்தை வகித்துக் கம்ஸனைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னாள். என்ன சொன்னாளென்றால்:-

## (45) சுலோகம்

கிம்மயா ஹதயா மந்த ஜாத : கலுகவாங்கக்ருத் !! யத்ரக்வசித் பூர்வ சத்ரு : மா ஹிம்ஸீ : கருபணும்வ்ருதா !!

**கருத்து:-** அடே கம்ஸா! என்னைக்கொல்லுவதால் என்ன பிரயோஜனம் - உன்னைக்கொல்லப்போகிற பூர்வ சத்துரு ஓரிடத்தில் பிறந்துவிட்டான் - வீணில் ஸ்திரீயான என்னை ஹிம்ஸிக்காதே என்று சொல்லி துர்க்கை ரூபத்தோடு ஆகாசத்தில் விளங்கும்போது துர்க்கையான மாயையை ரிஷிகளும் தேவதைகளும் ஸ்துதிக்கிறார்கள் !!

## (46) தீக்ஷிதரவாள் கிருதி - தரங்கிணி - ஆதி

மாயே - த்வம் - யாயே — மாம்பாஹி - த்வம்யாஹி - (மாயே)
தேயே தேயே - த்வமேவ மூதம் - தேஹி பாஹி (மாயே)
காயே கேயே - யாஹி காஹி தேஹி யேஹி பாஹி (மாயே)
உபாயே பேயே ஸரஸகாயே - ரஸகாயே - ஸகாயே காயே (மாயே)
ஸமுதாயெ - குருகுஹோதயே - ஸுதாந்த ரங்கிணி - அந்த
ரங்கிணி (மாயே)

**வசனம்:-** இம்மாதிரி தேவரிஷிகளால் ஸ்துதிக்கப்பட்டு மாயை பராசக்திரூபத்தோடு ஸ்வர்க்கலோகஞ் சென்ற பிறகு அந்தக்கம்ஸன், ஆஹோ! நான் எவ்வளவோ ஜாக்கிறதையாயிருந்தும் என்னைக் கொல்லக்கூடிய சத்துரு எங்கேயோ மறைந்து விட்டது, வீணில் தேவகீ வஸுதேவர்களைத் தொந்தரவு செய்தேன். அவாள் பெற்ற ஆறுகுழந்தைகளை வீணாக கொன்றேனே என்று தானே வருத்தமடைந்து கம்ஸன் என்ன செய்தானென்றால் !!

## (47) கந்தம் !! வஸந்தா ராகம் !!

வெஸகா - கம்ஸுடு தேவகீ - வஸுதேவு லஹிம்ஸபாபி வாலக்

ஸூபாகா ! பசிதநமுக ஜேசிதிநகி - வெஸநம் புனஸ்ருக்கே வாடு வேகமேம்ரொக்கே!!

கருத்து:- கம்ஸன் அடடா நான் - சிறுபிள்ளைத் தனத்தால் தேவகீ வஸுதேவாளை ஹிம்ஸித்தேனே என்று தான் வெஸநங்கொண்டு அவர்களுக்கு நமஸ்காரம் பண்ணி மன்னிக்கவேணுமென்று பிரார்த்தித்து காராகிருஹத்திலிருந்து விடுதலை செய்து விட்டான்.

அவதாரிகை:- பகவானை கோகுலத்தில் கொண்டுவிட்ட பிறகு அங்கே என்ன நடந்ததென்றால் !!

## (48) கந்தப் ! வஸந்தா !

கோதானமு மொதலகு நாது சோதானம்புலனு - கநக கோசமுலு ஸாதரமுக பூசுருல - கெமேசோதாவருடோஸ கெதாநுசுபமுகநு !!

கருத்து:- நந்தகோகுலத்தில் நந்தகோபன் தனக்கு புருஷப் பிரஜை பிறந்ததென்று கேள்விப்பட்டு மங்களமாகஸ்நானஞ் செய்து பட்டுவஸ்திரமுடுத்திக் கொண்டு பிராமணுளுக்கு சந்தோஷமாக கோதானம் பூதானம் ஸ்வர்ணதானமும் செய்து ஐந்மோஸ்தவங் கொண்டாடினன். ஸ்ரீமந் நாராயணமூர்த்தி பாலவடிவமாக இருக்கும்போது பூதேவி - ரத்தின தொட்டிலாகவும் - நாலுவே தங்களும் நான்கு சங்கிலிகளாகவுமுருவமெடுத்து வந்தன - அவ் வித சங்கிலியில் கோற்த தொட்டிலில் வெண்பட்டு பறப்பி பாலஸ்வரூபியான பகவானை தொட்டிலில் படுக்கவைத்து யசோதை எப்படி பாடினளென்றால் !!

## (49) லாலி! தனுஸரி !!

1. லாலிசந்திரார்தபால - கனநீல - லாலி - சுத்தரகோபாலா- லாலி காஞ்சனதுகூல - குணசீல - லாலி கோபால பாலா

2, சாசி இச்சேனுராரா - இஸுமந்த - பாச்சி போசேனுலேரா பூச்சிவாடொர்ச்சேனுரா - நாதொரா பொங்துகாமிதுருஞ்சுரா !!

3. ராரா மூத்துல்குமாரா - தொட்லநீலாகு - யேமிடிநவ்வுரா !! கோரிஜூடு சதவேமிரா - அந்தலோகெண்டகூதுலுயேமிரா !!

**வசனம்** :- யசோதை இந்தமாதிரி தாராட்டி தொட்டில்விட்டு பகவத்தர்சனத்துக்கு வந்த கோபிகை முதலானவர்களுக்கு கந்தம் குங்குமம் சந்தனம் புஷ்பம் தாம்பூலம் ரசவர்கம் முதலானதுகள் கொடுக்க பாலவடிவு கொண்ட பகவானுடைய லோகோத்தர திவ்ய ரூபலாவண்ய சௌந்தர்யத்தை தர்சித்து எல்லாரும் மனங்களிக்க தேவதைகள் ஆகாசத்திலிருந்து பூமாரிபொழிய பசுக்கள் மிக்க பால்பொழிய ரொம்ப, குதூஹலத்துடன் கோகுலத்தில் ஜந்மோத்ஸவம் கொண்டாடினார்கள் என்று பரிக்ஷித்து மஹாராஜனுக்கு, சுகாச்சாரியாள் கிருஷ்ணவதார மஹோத்ஸவ கதையை சொன்னார். இந்த கதையை எவர்கள் பக்தியுடன் கேட்கிறார்களோ! அவர்களுக்குச் சர்வாபீஷ்டமுமுண்டாகுமென்று சூதர் சொன்னார்!!

## !! உபஸம்ஹாரம் !!

பூர்வம் - வசுதேவர் - காச்யபராகவும் நந்தகோபன் - த்ரோணர் என்கிற வசுவாகவுமிருந்து - ஸ்ரீமந் நாராயணனை பஜித்த புண்ணியத்தால் இப்போ பகவானை புத்திரராக அடைந்து சந்தோஷித்து பகவத்பரிபூர்ண கிருபையை அடைந்தார்கள். ஆகையால் தான் ஆழ்வார் - (நாராயண பஜரேமானஸ) என்று தெரிவித்தார்!! கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் !! கோவிந்த கோவிந்த !! ஸீதாகாந்தஸ்மரணம்! ஜயஜய ஜயராம !! நம: பார்வதீபதயே! ஹரஹர மஹாதேவ !! ஜய புண்டரீகவரத !! ஹரிவிட்டல !! காயேனவாசா + யாமி !! மங்களம் வாசுதேவாய மங்களம் தேவகீஸுத ! மங்களம் நந்தபுத்ராய யசோதாநந்தநாயதே !!

சுபம் ! சுபம் !! சுபம் !!!

# கிருஷ்ண ஜந்மாக்கியானம்

## ஃ சம்பூர்ணம் ஃ

தமிழ்நாடு ஆவண... சென்னை 600

உ 40

# விஞ்ஞாபனம்.

ஹரிஹரகதா ரத்னாவளிக்கு வேண்டிய சந்தா மெம்பர்கள் போதுமானவரை இன்னமும் சேராததால் மாதந்தோறும் தவறாமல் நான்கு சரித்திரங்களும் சேர்த்து அச்சிடுவதற்குத் தாமதமாகி வருகிறது. இப்போது தனித்தனியாக (1) ராதாகலியாணம் (2) கணேச ஜநநம் (3) கிருஷ்ண ஜநநம் (4) கிருஷ்ண பால க்ரீடை ஆக இந்நான்கு சரித்திரங்களும் அச்சிடப்பட்டு விலைக்கு அனுப்பத்தயாரிலிருக்கிறது. இவைகள் அட்வான்ஸ் அனுப்பி சந்தா மெம்பர்களாகச்சேருகிறவர்களுக்கு சரித்திரம் ஒன்று அணா 8 வீதமும், மைத்தவர்களுக்கு அணா 12 வீதமும், விலைக்குக் கொடுக்கப்படும். இதைப்பார்க்கும் எனது நண்பர்கள் இப்புத்தகத்தைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்கும் காண்பித்து கூடும் இதர சந்தா மெம்பர்களைச் சேர்த்துக்கொடுக்கக் கோருகிறேன். ஸ்வல்பகாபிகள் அச்சிடப்படுவதால் வேண்டுபவர்கள் ஷை சரித்திரங்களை அடியில் கண்ட விலாஸதாருக்கு முன்னாடியே எழுதி சீக்கிரம் தருவித்துக்கொள்ளவும். இப்போது ஆரம்பித்திருக்கும் இப்பெரும் காரியத்திற்கு, சந்தா மெம்பராய்ச்சேர்ந்தும், சந்தா மெம்பர்களைச் சேர்த்துக்கொடுத்தும் உதவி செய்யும் அனைவர்களுக்கும் இவைபோன்ற இன்னும் அனேக ஹரிகதைகளை பகவத் கடாக்ஷத்தால் எழுதி அச்சிட்டு அனுப்புவதைத் தவிர யான் வேறு என்ன ப்ரத்யுபகாரம் செய்யப்போகின்றேன்.

**T. S. V. மஹாதேவ சாஸ்திரி,**

337 நெ. வடக்குச் சித்திரைவீதி,

ஸ்ரீரெங்கம்

(Trichy Distrct)